# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN

Celebrating 75th ANNIVERSARY



## இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்

(யோவான் 1:50)

THE TAMIL DISTRICT COUNCIL OF THE SIAG

July - August 2023
Volume : 63

ஆண்டு சந்தா ₹ 120/-
Issue : 4

## சென்னை மற்றும் மதுரையில் நடைபெற்ற போதகர்களுக்கான 12 மணி நேர உபவாச ஜெபம்








## தங்கத் தலைவர்கள்



Rev.Dr.Y.ஜெயராஜ்
(1928-2013)



Rev.K.C.ஆண்ட்ரூஸ்
(1924-2010)



Rev.S.ஆதாம்துரை
(1929-2019)

ஆசிரியரிடமிருந்து........!



# ‘இதுவரை....!’

கிறிஸ்துவுக்குள் பிரியமான பரிபூரண ஜீவன் பத்திரிக்கை வாசகர்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

நமது தமிழ் பிரதேசம் 75ம் ஆண்டை (75th Anniversary) இவ்வாண்டு கொண்டாடுகிறது. 1948ம் ஆண்டு தமிழகத்தில் துவங்கிய அசெம்பிளிஸ் ஆஃப் காட் ஊழியம் இன்று மேன்மேலும் வளர்ந்து வெற்றிநடை போட்டுக்கொண்டிருக்கிறது. கடந்த 75 ஆண்டு கால சரித்திரத்தை திரும்பிப் பார்த்தால் தேவன் செய்துள்ள காரியங்கள் நமக்கு ஆச்சரியத்தை கொண்டுவரும். நம்முடைய தனிப்பட்ட வாழ்விலும் தேவன் இதுவரை செய்த காரியங்களை நினைத்து பார்த்தால் புல்லரிக்கச் செய்துவிடும். வேதத்தில் ‘இதுவரை’ என்று வரும் வசனங்களில் சிலவற்றை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

## இதுவரைக்கும் ஆசீர்வாதம்

யோசேப்பின் புத்திரர் யோசுவாவை நோக்கி:
‘கர்த்தர் எங்களை **இதுவரைக்கும் ஆசீர்வதித்து** வந்ததினால்
நாங்கள் ஜனம் பெருத்தவர்களாயிருக்கிறோம்’ (யோசுவா 17:14).

அமெரிக்காவிலிருந்து ஊழிய அழைப்பைப் பெற்று தமிழகம் வந்த **திரு.ராபர்ட் எட்வர்ட்ஸ்-திருமதி.டாரிஸ் எட்வர்ட்ஸ்** என்ற தம்பதியரால் தமிழகத்தில் 1948ம் ஆண்டு ஏ.ஜி. ஊழியம் கணக்கப்பிள்ளை வலசை என்ற சிறுகிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அவர்கள் ஊழியத்தில் தெருப்பிரசங்கத்தின் மூலம் முதல்முதலாக இயேசுவை ஏற்றுக் கொண்டவர், ஜீவநல்லூரைச் சேர்ந்த **திரு.செல்வராஜ்** ஆகும். இவர்கள் மூலம் 1949ம் ஆண்டு ஜுலை 3ந் தேதி கணக்கப்பிள்ளை வலசையில் ஓர் ஆராதனை ஸ்தலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதுவே தமிழ் பிரதேச தேவ சங்கத்தின் முதல் திருச்சபை. **பாஸ்டர்.Y.ஜெயராஜ்** அவர்கள் இவர்களின் ஊழியத்தில் மொழிபெயர்ப்பு செய்வதில் மிகவும் உதவியாக இருந்தார்கள். **பாஸ்டர். ராஜமணி, பாஸ்டர். ஆதாம்துரை** அவர்களெல்லாம் **எட்வர்ட்ஸ்** தம்பதியரின் ஊழியத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டவர்கள். அவர்கள் ஆரம்பத்தில் ஆயிரம் ஆத்துமாக்களைத் தாரும் என்று ஜெபித்தார்கள். இன்று சுமார் 3 லட்சம் ஆத்துமாக்களையும், 2000க்கும் அதிகமான சபைகளையும் கர்த்தர் நமது தமிழ் பிரதேசத்தில் தந்துள்ளார். இதுவரைக்கும் தேவன் அருளின எல்லா ஆசீர்வாதங்களுக்காகவும் தேவனை துதிப்போமா?

## இதுவரைக்கும் கிருபை

‘தாவீது ராஜா: கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர்... என்னை
**இதுவரைக்கும்** கொண்டு வந்ததற்கு நான் எம்மாத்திரம்?’
என்றான் (2 சாமு.7:18).

அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டைபண்ணலாம் என்று வேதம் கூறுகிறது (சகரியா 4:10). விரல்விட்டு எண்ணக்கூடிய சபைகளையும் அங்கத்தினர்களையும் மட்டுமே கொண்டு துவங்கிய தமிழ் பிரதேச தேவ சங்கம், இன்று வெகுவாய் வளர்ச்சி பெற்று இந்தியாவில் வலிமையான பிரதேசமாக திகழும் அளவிற்கு ஓங்கி நிற்பது தேவனுடைய அளவற்ற கிருபை. "எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது" (2 கொரி.3:5) என்று பவுல் கூறுவது போல தேவனுடைய கிருபையே நம்முடைய பிரதேசத்தை இம்மட்டும் கொண்டு வந்துள்ளது. அவருடைய கிருபைக்காக கர்த்தருக்கு நன்றி சொல்லுவோம்!

## இதுவரைக்கும் நற்செய்தி ஊழியம்

'...தேவனே, **இதுவரைக்கும்** உம்முடைய அதிசயங்களை அறிவித்து வந்தேன்.
இப்பொழுதும் தேவனே, இந்த சந்ததிக்கு உம்முடைய வல்லமையையும்,
வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும்
நான் அறிவிக்குமளவும் என்னைக் கைவிடீராக! ' (சங்.71:18).

தேவன் தமது மகிமையை பறைசாற்றவும், தமிழகத்திலும் தேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் நற்செய்தியை அறிவிக்க இப்படிப்பட்ட காலத்துக்கு தமிழ்நாடு ஏ.ஜி. ஊழியங்களை எழுப்பினார். இதுவரை தமிழ்நாட்டின் ஒவ்வொரு பட்டணம் மற்றும் கிராமங்களில் ஊழியம் செய்ய தேவன் வாசல்களை திறந்தார். நமது பிரதேசத்தில் செயல்படும் பல்வேறு ஊழியங்களாகிய சிறுவர் ஊழியம், மாணவர் ஊழியம், வாலிபர் ஊழியம், ஆண்கள் ஊழியம், பெண்கள் ஊழியம், பத்திரிக்கை ஊழியம், இஸ்லாமிய ஊழியம், மிஷனரி ஊழியம், ஆலோசனை ஊழியம், நற்செய்தி மற்றும் சபை ஸ்தாபிக்கும் ஊழியம் ஆகிய ஊழியங்கள் மூலம் பல்லாயிரக்கணக்கான மக்கள் இதுவரை இயேசுவை அறிந்துள்ளனர். இரட்சிக்கப்பட்டுள்ளனர். 4 வேதாகம கல்லூரி ஊழியங்கள் மூலம் அநேகர் ஊழியப் பயிற்சிப் பெற்று தேவனுடைய நாமத்தை பல்வேறு இடங்களில் பறைசாற்றி வருகின்றனர். '**அறுவடையின் பத்தாண்டு**' திட்டம் **(Decade of Harvest ), "Church Beyond 2000'** திட்டம், **"Vision 2020'** திட்டம் போன்ற திட்டங்களை தேவன் ஆசீர்வதித்து ஊழியத்தில் வளர்ச்சியையும் பெருக்கத்தையும் தந்துள்ளார். தேவனுக்கே மகிமை!

## இதுவரைக்கும் வெற்றி

'அப்பொழுது சாமுவேல்,..... இம்மட்டும் **(இதுவரைக்கும்)**
கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார் என்று சொல்லி, அதற்கு எபெனேசர்
என்று பேரிட்டான்' (1 சாமுவேல் 7:12)

பெலிஸ்தியரை முறியடித்து, தேவ கரத்திலிருந்து மாபெரும் வெற்றியைப்பெற்ற தேவ ஜனங்கள் வெற்றி முழக்கமிட்டு 'எபெனேசர்' என்றனர். சாமுவேலைப் போல தமிழ் பிரதேச தேவசங்கத்தின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் வித்திட்ட அநேகர் உண்டு. நமது பிரதேசத்திற்கு வந்து ஊழியம் செய்த மிஷனரிகளின் பட்டியல் நீளமானது. அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்: **Rev.டேவிட் ஸ்டூவர்ட் சீனியர்**, **Sis.கொலின் க்வின்**, **Rev.ஸ்டீவ் ஆலன், Rev.ஜிம் லோவல்** மற்றும் பலர். திருச்சபைகளை ஸ்தாபிப்பது, சக ஊழியங்களை உற்சாகப்படுத்துவது, இளைஞர்கள் மற்றும் பெண்களை ஊக்குவிப்பது, பிரதேசத்தின் பணிகளை ஒருங்கிணைப்பது என்று ஏறத்தாழ அனைத்து துறைகளிலும் பெரும்பங்காற்றியுள்ளனர். இவர்களுடன் நம் ஸ்தல ஊழியர்களின் பங்களிப்பும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

**Rev.Y.ஜெயராஜ், Rev.K.C.ஆன்ட்ரூஸ், Rev.ஆதாம் துரை** ஆகியோர் நமது பிரதேச வளர்ச்சி மற்றும் வெற்றியின் முன்னோடிகள். இவர்கள் நமது பிரதேசத்தின் தங்க தலைவர்கள். அதைத் தொடர்ந்து (லேட்)**Rev.C.சகரியா**, **Rev.P.S.ராஜமணி**, **Rev.D.மோகன்**, **Rev.L.ஜெயபாலன்**, **Rev.V.J.பாலஸ்**, **Rev.ஸ்வர்ணராஜ்**, **Rev.ஆபிரகாம் தாமஸ்**, **Rev.ஸ்டீவ் ஜெயராஜ்** மற்றும் இன்னும் பல தேவ ஊழியர்களின் அர்ப்பணிப்பு மிகுந்த ஊழியத்தாலும், விடா முயற்சிகளாலும் தமிழ் பிரதேசத்தின் சபைகள் வளர்ந்து வருகிறது.

இதுவரை ஆசீர்வதித்து, கிருபை தந்து, பயன்படுத்தி, வெற்றி தந்து நடத்தி வந்த நமது கர்த்தர், நமது தமிழ் பிரதேசத்தை இன்னும் அதிகமாக ஆசீர்வதித்து, இதிலும் பெரிதானவைகளை காணச் செய்வாராக! (9-ம் பக்கம் பார்க்கவும்). முந்தின ரசத்தை பார்க்கிலும் பிந்தின ரசம் அதிக ருசியாக இருந்தது போலவும், முந்தின ஆலயத்தின் மகிமையை பார்க்கிலும் பிந்தின ஆலயத்தின் மகிமை அதிகமாக இருந்தது போலவும் தேவன் இன்னும் மகிமையான காரியங்களை செய்ய ஆயத்தமாயிருக்கிறார்! எதிர்பார்ப்போடு தொடர்ந்து செயல்படுவோம்!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி தெற்கு மண்டலம்.

---

## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். உங்கள் ஸ்தல சபை போதகர் மூலமாகவும் பிரதேச பொருளாளருக்கு அனுப்பி வைக்கலாம். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**
30, நாவலர் நகர், மதுரை-625 016. போன் : 0452 4200664

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்தரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துனுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484



# இயேசு கிறிஸ்துவின் வருகையும், உலக முடிவும் அதிசீக்கிரம்

Rev. P.S. ராஜமணி
இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

பாகம்-1: நிறைவேறிவிட்ட தீர்க்கதரிசனங்கள், ...தொடர்ச்சி

## ஐ.நா. தீர்மானம் 181

1947 நவம்பர் 29ம் தேதி ஐக்கிய நாடுகள் நிறுவனம் பாலஸ்தீனாவை யூதர்களுக்குக் கொடுக்க ஓட்டளித்தது. 1948 மே மாதம் 14ம் தேதி பாலஸ்தீனா யூதரின் நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. அன்று காலை 9 மணிக்கு டெல் அவிவ் நகரத்தில் பிரிட்டிஷ் கொடி இறக்கப்பட்டது. இஸ்ரவேல் நாட்டின் முதல் பிரதம மந்திரியாக தெரிந்தெடுக்கப்பட்ட டேவிட் பென்குரியன் வானொலியில் அறிவிப்புக் கொடுத்தார்... இதுவரை நாடில்லாதிருந்த யூதர்களாகிய எங்களுக்கு ஒரு நாட்டை ஏற்படுத்த தேவன் உதவி செய்தார். எங்கள் நாட்டின் பெயர் "இஸ்ரவேல்'. இந்த செய்தியைக் கேட்ட யூதர்கள் எக்காளங்களை ஊதி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அன்று நடுஇரவில் இஸ்ரவேல் நாட்டின் கொடியாக தாவீதின் கொடி உயர்த்தப்பட்டது.

## டேவிட் பென்குரியன் முதல் பிரதமரானார்

அன்று இரவு 12.11க்கு அமெரிக்க ஜனாதிபதி இஸ்ரவேலை அங்கீகரித்து வாழ்த்தினார். மே 17ம் தேதி ரஷ்யா அங்கீகரித்தது. 1949 மார்ச் 22ல் 46 நாடுகள் இஸ்ரவேலை அங்கீகரித்தன. அரேபியர் மட்டும் அங்கீகரிக்கவில்லை. இஸ்ரவேல் தனிநாடாக பிரகடனப்படுத்தப்பட்ட சில மணி நேரத்திலேயே சிரியா, ஈராக், ஜோர்டன், எகிப்து, லெபனான் ஆகிய நாடுகள் இஸ்ரவேல் மேல் யுத்தம் தொடுத்தன. இஸ்ரவேல் நாட்டில் யூதர்கள் அனுசரித்த முதல் ஓய்வு நாளிலேயே எகிப்திய போர் விமானங்கள் டெல் அவிவ் நகரத்தைத் தாக்கின. இஸ்ரவேல் நாடு என்ற ஒன்று இராதபடி அழித்துவிடுவோம் என்று எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. தெற்கே இருந்து எகிப்தும், வடக்கிலிருந்து சிரியா, லெபனானும், கிழக்கிலிருந்து ஜோர்டான், ஈராக்கும் தாக்க ஆரம்பித்தன. சில மணி நேரத்திற்கு முன்பு சுதந்தரம் பெற்ற நாடு என்ன செய்ய முடியும்?

ஐக்கிய நாடுகள் சபை ஒன்றும் சொல்லவில்லை. உலக நாடுகளில் ஒன்றும் இஸ்ரவேலுக்கு உதவ முன்வரவில்லை. சிறிய பழைய ஆகாய விமானம் ஒன்றும், ஒரு பழைய கப்பலும்தான் இஸ்ரவேலுக்கு ஆயுதங்களாய் இருந்தன. ஆனால் யெகோவா தேவன் அவர்களோடு இருந்ததால் அற்புதம் நடைபெற்றது. ஏராளமான யூதர்கள் கொல்லப்பட்டாலும், அத்தனை நாடுகளும் கூட்டாக யுத்தம் செய்த போதிலும் இஸ்ரவேல் அவர்களை விரட்டி அடித்தது. 27 நாட்கள் இந்த யுத்தம் நடைபெற்றது. ஐக்கிய நாடுகள் சபை யுத்தத்தை நிறுத்த அழைப்புக் கொடுத்தது. சில நாட்கள் கழித்து மறுபடியும் யுத்தம் ஆரம்பித்து அந்த ஆண்டு முழுவதும் நடைபெற்றது.

1949 பிப்ரவரி 24ம் தேதி இஸ்ரவேல், எகிப்து சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. பழைய எருசலேம் ஜோர்டான் நாட்டின் கட்டுப்பாட்டில் இருக்கத் தீர்மானிக்கப்பட்டது. யூதர்கள் பழைய எருசலேமுக்குள் வந்துபோக அனுமதிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டாலும் ஜோர்டான் நாட்டின் அரசனாயிருந்த அப்துல்லா பெரிய தடுப்புச் சுவரைக் கட்டி யூதர்கள் உள்ளே வரத்தடை செய்தான். தேவாலயம் இருந்த இடத்தில் கட்டப்பட்டுள்ள மசூதிப் பகுதியில் 1951-ல் ஜோர்டான் அரசன் அப்துல்லா கொல்லப்பட்டான்.

1949ம் ஆண்டிலிருந்து உலகத்தின் பல நாடுகளிலிருந்தும் யூதர்கள் வந்து இஸ்ரேல் நாட்டில் குடியேறினர்.

முதல் 18 மாதங்களில் சுமார் 3,50,000 யூதர்கள் பல நாடுகளிலிருந்தும் வந்து குடியேறினர். சில நாடுகளை மட்டும் கீழே குறிப்பிடுகிறோம்.

- ஏமனிலிருந்து 45000 பேர்,
- ஈராக்கிலிருந்து 130000 பேர்,
- துருக்கியிலிருந்து 33000 பேர்,
- செக் குடியரசிலிருந்து 20000 பேர்,
- பல்கேரியாவிலிருந்து 36000 பேர்,
- யூகோஸ்லோவியா 7000 பேர்,
- போலந்திலிருந்து 28000 பேர்,
- வட ஆப்பிரிக்காவிலிருந்து 35000 பேர்,
- சீனாவிலிருந்து 5000 பேர்,

மேலும் இந்தியாவிலிருந்தும் இன்னும் பல நாடுகளிலிருந்தும் இஸ்ரவேலில் வந்து குடியேறினர்.

1949 ஜனவரி 20ம் தேதி இஸ்ரவேலில் சட்ட சபைத் தேர்தல் நடைபெற்றது. கெய்ம் வெய்ஸ்மேன் (CHAIM WEIZMANN) முதல் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதே ஆண்டு மே மாதம் 11ம் தேதி இஸ்ரேல் நாடு ஐ.நா. சபையின் 50வது அங்கமாக அங்கீகரிக்கப்பட்டது.

1967 ஜீன் 5-10 ஆகிய 6 நாட்களில் நடந்த யுத்தத்தில் எகிப்து, ஜோர்டான், சிரியா நாடுகள் கூட்டாக இஸ்ரவேலைத் தாக்கின. இஸ்ரவேல் என்ற நாடு கடலில் தள்ளப்படும் என்று எகிப்து ஜனாதிபதி நாஸர் அறிவித்தார். ஐ.நா. சபையின் பாதுகாப்பு வீரர்களை சீனாய் பகுதியை விட்டு வெளியேற கட்டளையிட்டார். யாரும் எதிர்பாராத நேரத்தில் இஸ்ரவேல் போர் விமானங்கள் எகிப்து, ஜோர்டான், சிரியா ஆகிய நாடுகளின் போர்விமானங்கள் நிறுத்தியிருந்த இடங்களுக்குச் சென்று கூண்டோடு அழித்தன. எகிப்தும் மற்ற நாடுகளும் செய்வது அறியாது நிலைகுலைந்தன. 3ம் நாளில் யூத சேனை பழைய எருசலேமுக்குள் புகுந்து தேவாலயப் பகுதியையும் மற்றப் பகுதிகளையும் பிடித்தன.

தேவாலய மேற்குச் சுவர் இருக்கும் இடத்திற்கு யூத போர் வீரர்கள் சென்று தங்கள் புனித ஸ்தலத்தைப் பார்த்து கண்ணீர்விட்டு அழுதனர். ராணுவத்தினருக்கு போதகராயிருந்த பிரிகேடியர் ரசி ஷாலமோ (Rassi Shalomo) தேவாலய மேற்குச் சுவருக்குச் சென்று (Western Wall) ராணுவத்தினரோடு பிரார்த்தனை நடத்தினார். ராணுவ மந்திரியாயிருந்த மோஷே தயான் Moshe Dayan) நமது மகா பரிசுத்த தலத்திற்கு வந்துவிட்டோம், இனி ஒரு போதும் இதை விட்டுவிடமாட்டோம் என்று உணர்ச்சி வசப்பட்டு அறிக்கையிட்டார். இதே நாளில் சுமார் 2 இலட்சம் யூதர்கள் இந்த இடத்திற்கு வந்து பிரார்த்தனை செய்தனர்.

1973ல் எகிப்து இஸ்ரவேலர் மேல் போர் தொடுத்து தோல்வி கண்டது. அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் தலையிட்டு இஸ்ரவேல் எகிப்திற்கு இடையே சமாதான ஒப்பந்தம் ஏற்படுத்தினார். 1977 நவம்பர் மாதம் இனிமேலும் எகிப்தியர் கொல்லப்படுவதை நான் விரும்பவில்லை. இஸ்ரவேல் நாட்டை சந்திக்கவும் ஆயத்தம் என்று எகிப்து அதிபர் அன்வர் சதாத் அறிவித்தார்.

அதனை வரவேற்ற இஸ்ரவேல் பிரதமர் மேனச்சம் பிகின், அன்வர் சதாத்தை வரும்படி அழைத்தார். 1977 நவம்பர் 19ம் தேதி அன்வர் சதாத் இஸ்ரவேல் நாட்டின்

பாராளுமன்றத்தில் உரையாற்றினார். 1978ல் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மிகார்ட்டர் இந்த இரு நாட்டு பிரதமர்களையும் அமெரிக்காவிற்கு அழைத்து கேம்ப் டேவிட் என்ற இடத்தில் கலந்து பேசி ஓர் சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.

1980 ஜீலை 30ம் தேதி எருசலேம் இஸ்ரவேலின் தலைநகராகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இதை பெரும்பாலான உலக நாடுகள் அங்கீகரித்தாலும் முஸ்லீம் நாடுகள் இதை இன்று வரை ஏற்றுக்கொள்ளவில்லை.

2000 வருட கணக்கெடுப்பின்படி இஸ்ரவேல் நாட்டின் மக்கள் தொகை 51,21,683. எருசலேமின் மக்கள் தொகை 670000.

யூதர்கள் 80.7% சதவிகிதம், அரேபியர் 15.6%

1947ம் ஆண்டிலிருந்து 102 நாடுகளிலிருந்து இஸ்ரவேலுக்கு வந்து குடியேறிய யூதர்களின் எண்ணிக்கை 28,00,000.

... தொடரும்

## 8 Rules for Spiritual Growth

Eight rules that promote good health in babies can be adapted and applied to a Christian's spiritual growth.

1. **Daily Food.** Take in the "pure milk of the word" through study and meditation (1 Pet. 2:2).
2. **Fresh Air.** Pray often or you will faint. Prayer is the oxygen of the soul (1 Thess. 5:17).
3. **Water.** We must be filled with the Holy Spirit (John 7:38, 39).
4. **Regular Exercise.** Put into practice what you learn in God's Word. Witness for Jesus (James 1:22).
5. **Adequate Rest.** Rely on God at all times in simple faith (Mark 6:31).
6. **Clean Surroundings.** Avoid evil company and whatever will weaken you spiritually (Eph. 5:11).
7. **Loving Care.** Be part of a church. Benefit from a pastor's teaching and Christian fellowship (Heb. 10:25).
8. **Periodic Check-ups.** Examine your spiritual health (1 Cor. 11:31).

## 5 Dimensions of Church Growth

Churches grow warmer through *fellowship*
Churches grow deeper through *discipleship*
Churches grow stronger through *worship*
Churches grow broader through *ministry*
Churches grow larger through *evangelism*

*Dr. Rick Warren*



# தலைமைத்துவம்

## (Leadership)

**Dr. L. ஜெயபாலன்**

முன்னாள் முதல்வர், தமிழ்நாடு வேதாகம கல்லூரி

தலைமைத்துவம் என்பது மிகப் பொறுப்பான கடமையாகும். ஒரு சிலர் தவிர அனைவருமே தலைவர்களாகத்தான் இருக்க விரும்புபவர். தலைவராக இருக்க வாஞ்சை உள்ளவர்கள் சிலத் தகுதிகளை உடையவர்களாக இருக்க வேண்டும்.

**1. மனதில் ஆர்வம் இருக்க வேண்டும் :**

இந்த ஆர்வம் பெற்றோர்களால், ஆசிரியர்களால் பிற தலைவர்களைக் குறித்துப் படிக்கும்பொழுது மனதில் வரக்கூடும்.

**2. ஒரு தலைவனுக்கு உண்மை தேவை :**

எண்ணத்தில், வார்த்தைகளில், செய்கையில் இது காணப்படவேண்டும்.

**3. குறைகளை ஒத்துக்கொள்ளுதல் :**

அப்பொழுது தாவீது நாத்தானிடத்தில் நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தேன் என்றான். நாத்தான் தாவீதை நோக்கி நீ சாகாதபடிக்கு கர்த்தர் உன் பாவம் நீங்க செய்தார் (2 சாமுவேல் 12:13).

தாவீது ஒரு போர்சேவகனின் மனைவியிடம் தவறாக நடந்து, அதை மறைக்க முயற்சித்தான். அவள் கணவனை போரில் சாகும்படி உத்தரவிட்டான். கர்ப்பமான அந்தப் பெண்ணைத் தாவீது அரசன் தன்னுடன் வைத்துக்கொண்டான், இந்தக் காரியம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாய் இருந்தது (2 சாமுவேல் 11:27)

பரிசுத்தமுள்ள தேவன் பாவத்தைப் பார்க்காதவர். எனவே ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி தாவீதின் பாவத்தைச் சுட்டிக்காட்டியபொழுது நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தேன் என்றான். தன் தவறை உணர்ந்தது கடவுளுக்கு முன் பிரீதியாயிருந்தது.

- நீங்கள் தவறு செய்கையில், தலைவர் உங்களைத் திருத்தினால் உடனே நான் தவறு செய்துவிட்டேன் என்னை மன்னித்துவிடுங்கள் என கூறவேண்டும்.
- உங்கள் குறைகளைக் கூறியவரைக் குறித்து கசப்போ, வெறுப்புணர்ச்சியோ கொள்ளக்கூடாது. ஒரு கத்தோலிக்க கன்னியாஸ்திரீ, தன்னைத் திருத்தியவர் முன் உடனே முழங்கால்படியிட்டு, தனது தவறை ஏற்றுக்கொள்ள வேண்டுமாம். பின்னர் எழுந்திருந்து முகமலர்ச்சியுடன் செல்லவேண்டுமாம். ஒருவரைத் திருத்துவது கடவுளின் சித்தமாகும்.

உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்கிறோம் (1 தெசலோனிக்கேயர் 5:12-13).

தவறுசெய்பவரைத் தலைவராக இருக்கிறவர் திருத்துகையில் அவரைத் தனிமையில் வைத்துத் திருத்த வேண்டும். புத்திசொல்ல வேண்டும்.

உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில் அவன் குற்றத்தை உணர்த்து (மத்தேயு 18:15).

தலைவனாக இருப்பவன், பட்சபாதம் காட்டுகிறவனாக, தனது உறவினருக்கென ஒரு தத்துவத்தைக் கையாளக்கூடாது. யாராயிருப்பினும் தலைவனுடைய நியாயம் ஒரே மாதிரி இருக்கவேண்டும்.

தலைவனாக இருப்பவன் ஒரு தடவை தவறு செய்தால், மறுபடி அந்தத் தவறை செய்யாமல் இருக்க தீர்மானிக்க வேண்டும்.

**4. கீழ்ப்படிதல்:**

பலி செலுத்துவதைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே மேலானது (2 சாமுவேல் 15:22). நாம் என்ன நினைக்கிறோம் அல்லது பிறர் என்ன நினைக்கிறார்கள் என்பதல்ல, கடவுள் நம்மைக் குறித்து என்ன நினைக்கின்றார்? என்பதே அதி முக்கியமானதாகும். இயேசு கிறிஸ்து தனது சீஷர்களிடம் என் பின்னே வாருங்கள் என்னில் நிலைத்திருங்கள் என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் என்று போதித்தார். சீஷர்கள் கீழ்ப்படிந்தபொழுது மகிழ்ச்சியடைந்தனர். இயேசு கிறிஸ்து பேதுருவைப் பார்த்து நீ கடலுக்குப் போய், தூண்டில்போட்டு, முதலாவது அகப்படுகிற மீனைப் பிடித்து அதின் வாயைத் திறந்துபார். ஒரு வெள்ளிப்பணத்தைக் காண்பாய்..... அதை எடுத்து... அவர்களிடத்தில் கொடு என்றார் (மத்தேயு 17:27) இயேசுவின் வார்த்தைகளுக்குப் பேதுரு அப்படியே கீழ்ப்படிந்ததால் மேன்மை அடைந்தான்.

கீழ்ப்படிதலுக்கு இயேசு கிறிஸ்துவே சிறந்த முன் மாதிரி. பரமப் பிதாவிற்கு இயேசு கிறிஸ்து எப்பொழுதும் கீழ்ப்படிந்திருந்தார். அதனால் பரமபிதா அவர்மேல் மிகவும் பிரியமாக இருந்தார் (மத்தேயு 3:17). அவர் குமாரனாயிருந்தும், பட்டப் பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு என எபிரெய நிருபத்தில் வாசிக்கின்றோம் (எபிரெயர் 5:8).

**கடவுளின் சத்தத்திற்குச் செவிமடுத்தல்**

இந்த நியாயப்பிரமாணப் புத்தகம் உன் வாயைவிட்டு (விலகாதிருப்பதாக) பிரியாதிருப்பதாக... அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய். அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்வாய் (யோசுவா 1:8).

**கடவுளுக்குக் கீழ்ப்படிதல் நித்தியமான முடிவுகளைக் கொண்டுவரும்**

ஆபிரகாம் தேவனுடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்தான். அதினிமித்தம் அவன் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனானான் அவன் கடவுளுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, தன் தேசத்தை (Citizenship) பிரஜா உரிமை, தனது இனத்தை (Relationship உறவுமுறை) தகப்பன் வீட்டை (Ownership-சொத்துரிமை) கடவுள் காண்பித்த தேசத்திற்குச் சென்றான் (ஆதியாகமம் 12:1-2) அதனால் அவன் யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் தேசப்பிதாவானான்.

**கடவுளுக்கு அடிபணிதல்... தனது உணர்வுகளை விட்டுவிடச்செய்யும்**

ஆசா என்னும் அரசன் கடவுளை நேசித்தான். அவருக்காக வைராக்கியமாக இருந்தான். ஆசாவின் தாயாகிய மாகாளையும் இராஜாத்தியாய் இராதபடிக்கு விலக்கிப்போட்டு என வேதத்தில் வாசிக்கிறோம் (2 நாளாகமம் 15:16). இயேசுவைப் பின்பற்றுகிற நாம் நம் உள்ளத்தில் (தன்னைத்தான் வெறுத்து) உறவுகளில் (தகப்பன், தாய், சகோதரன், சகோதரி, மனைவி, பிள்ளைகள்) உடமைகளில் (வீடு, நிலம் கடவுளுக்கு முதலிடம் கொடுத்தால்) அது அநேக ஆசீர்வாதங்களை இம்மையிலும் மறுமையிலும் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்
## YOU WILL SEE GREATER THINGS

Rev. Dr. ஜெரி டேனியல்

**இயேசு பிரதியுத்தரமாக: “இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்”. வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இது முதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார் (யோவான் 1:50,51).**

76ம் ஆண்டிற்குள் பிரவேசித்திருக்கும் நமது ஸ்தாபனத்திற்கும், சபை விசுவாசிகளுக்கும், யோவான் 1:50,51 வசனங்களில் காணப்படும் மூன்று ஆசீர்வாதங்களை தேவன் தந்தருளுவாராக. இதிலும் பெரிய காரியங்கள்– திறந்தவானம்–தேவ தூதர்களின் உதவி. இது ஆண்டவராகிய இயேசு கூறின முதலாவது வாக்குத்தத்த வார்த்தையாகும். இதில் அளவற்ற ஆசீர்வாதங்கள் அடங்கியிருப்பதை நாம் காண முடியும்.

### மூன்று வாக்குத்தத்தங்கள்

### 1. இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்

நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னை கண்டேன் என்றும், இதோ நீ கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றும் இயேசு கூறினபோது, நாத்தான்வேல் இயேசுவை சகலத்தையும் அறிந்தவர் (Omniscient) என்பதை அறிந்து கொண்டார் (யோவான் 1:47,48). இப்பொழுது இயேசு நாத்தான்வேலை பார்த்துக் கூறுகிறார், “நீ என்னை சகலத்தையும் அறிந்தவர் என்பதை அறிந்து கொண்டாய். இது முதற்கொண்டு நான் சர்வ வல்லமை உள்ளவர், சகலமும் செய்ய வல்லவர் (Omnipotent) என்பதை காண்பாய்”. இயற்கை மீதும், வியாதி, மரணம், சாத்தான் மேலும் எனக்கு வல்லமை உண்டு என்பதை அறிந்து கொள்வாய். தண்ணீர்த் திராட்சை ரசமாக மாறுவதை காண்பாய், 5000 பேருக்கு போஜனம் கொடுப்பதை காண்பாய், குருடரை சுகமாக்குவதையும், மரித்தோரை எழுப்புவதையும் காண்பாய் (யோவான் 2–11 அதிகாரங்கள்) என்று கூறுகிறார்.

தேவ ஜனமே, நீங்கள் தேவனை இதுவரை ஒருசில கோணத்தில் அறிந்திருக்கலாம், அனுபவித்திருக்கலாம். இது முதல் இதிலும் பெரிதானவைகளைக் காண்பீர்கள். தேவனின் பல கோணங்களையும், வல்லமைகளையும் காண்பீர்கள். அவர் இருதயத்தை அறிந்தவர் மட்டுமல்ல, இருதயத்தை மாற்றக்கூடிய வல்லமையுள்ளவர். அவர் நம்முடைய வாழ்வின் மற்றும் ஊழியத்தின் அனைத்து தேவைகளையும் சந்திக்க வல்லவர். நமக்கு பெரியக் காரியங்களைச் செய்வார்.

### 2. திறந்த வானம்

‘திறந்த வானம்’ என்பது பரலோகம் நம் அருகில் காணப்படும் என்பதை குறிக்கிறது. தேவ பிரசன்னமும் ஆசீர்வாதமும் இறங்கி வருவதற்கு அடையாளமாக இருக்கிறது. வானம் நமக்காக திறக்கப்படும்போது தேவனுடைய அளவற்ற ஆசீர்வாதங்களை நாம் எளிதாக பெற முடியும். வானம் திறக்கப்படும்போது **பரலோக வல்லமையை** நாம் பெற முடியும். எழுப்புதலை அனுபவிக்க முடியும். இயேசுவுக்கு வானம் திறக்கப்பட்டு, ஆவியானவர் புறாவைப் போல அவர்மேல் வந்து இறங்கினார் (மாற்கு1:9,10). அவர் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் நிறைந்து

சோதனைகளை மேற்கொண்டார், வியாதிகளை சுகமாக்கினார், சுவிசேஷத்தை பிரசங்கித்தார் (அப்.10:38; லூக்கா4:18). தேவன் நம்மையும் அப்படிப்பட்ட வல்லமையினால் நிரப்பி பயன்படுத்துவார்.

வானம் திறக்கப்படும்போது பரலோக **தரிசனங்களையும், வெளிப்பாடு களையும்** பெற முடியும். எசேக்கியேல், ஸ்தேவான், பேதுரு, யோவான் போன்றவர்களுக்கு வானம் திறக்கப்பட்டது என்று வேதம் கூறுகிறது (எசே.1:1,28; அப்.7:56;10:11,12;வெளி.4:2;9:11). அவர்கள் தேவனைக் குறித்தும், ஊழியத் திட்டங்களைக் குறிக்கும், இயேசுவின் வருகையைக் குறித்தும் வெளிப்பாடு களையும், தரிசனங்களையும் கண்டனர். நமக்கும் தேவன் தரிசனங்களை தந்து ஆசீர்வதிப்பார்.

மேலும் வானம் திறக்கப்படும்போது **பரலோக நன்மைகளை** பெற முடியும். இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் வனாந்திரத்தில் 'வானத்தை திறந்து' மன்னாவை அவர்களுக்கு ஆகாரமாக வருஷிக்கப்பண்ணி, வானத்தின் தானியத்தை அவர்களுக்குக் கொடுத்தார் (சங்.78:23,24). தொடர்ந்து கானான் தேசத்திலும், அவர்கள் கீழ்படிந்து விசுவாசித்து நடக்கும்போது வானம் திறக்கப்பட்டிருக்கும் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் நமக்கு தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார் (உபாகமம் 28:12).

### 3. தேவ தூதர்களின் ஊழியம்

தேவன் தம்முடைய பிள்ளைகளுக்காக தேவதூதர்களின் உதவியைக் கட்டளையிடுகிறார். அவர்கள் நமக்கு நல்ல செய்திகளை கொண்டு வருகிறார்கள், பணிவிடை செய்கிறார்கள், நமக்காக யுத்தமும் செய்கிறார்கள். **செய்தி கொண்டு வரும் தூதர்கள் (Messenger Angels)** சகரியா, எலிசபெத், மரியாள் போன்றவர்களுக்கு நம்பிக்கையும், உற்சாகத்தையும் கொடுக்கும் நல்ல செய்திகளை கொண்டு வந்தார்கள் (லூக்கா 1:13,18,19,28,30,35). **பணிவிடை மற்றும் பாதுகாக்கும் தூதர்கள் (Ministering Angels)** பேதுரு, அப்போஸ்தலர்கள், பவுல் போன்றவர்களை சிறைச்சாலைகளிலிருந்து விடுவித்தார்கள் (அப்.5,12:7-10;27:23). இயேசுவுக்கு வனாந்திரத்திலும் கெத்சமெனே தோட்டத்திலும் பணிவிடை செய்தார்கள் (மாற்கு 1:13; லூக்கா 22:43). தேவ ஜனங்களை பாதுகாக்கிறார்கள் (சங்.91:11; மத்.18:10). **யுத்தம் செய்யும் தூதர்கள் (Martial Angels)** நமக்காக யுத்தம் செய்கிறார்கள். எசேக்கியா ராஜாவுக்கு விரோதமாக எழும்பி வந்த அசீரிய படை வீரர்கள் 185000 பேரை ஒரு தூதன் கொன்றுப் போட்டான் (2 இராஜா.19:35). தேவ ஜனங்களுக்கு விரோதமாக செயல்பட்ட ஏரோது ராஜாவை ஒரு தூதன் அடித்தான் (அப்.12:21-23). இந்த தூதர்கள் சாத்தானோடும் யுத்தம் பண்ணி நமக்காக வெற்றி கொண்டு வருகிறார்கள் (வெளி.12:7).

வரும் நாட்களில் தேவ தூதர்களின் பணிவிடையை நாம் நிச்சயம் அனுபவிப்போம்! அவர்கள் நம்மை பாதுகாப்பார்கள் (தானி.6:20-23; 2இராஜா. 6:13-17), வழி நடத்துவார்கள் (மத்.1:20,21; அப்.8:26), பராமரிப்பாளர்கள் (ஆதி. 21:17-20, 1 இராஜா. 19:5-7)! ஆமென்!

## மூன்று நிபந்தனைகள்

யோவான் 1:50,51 வசனங்களிலுள்ள வாக்குத்தத்தங்கள் முதலில் நாத்தான்வேலுக்கு கொடுக்கப்பட்டது. அவனிடம் இயேசு கண்ட குணங்கள், நம்மிடமும் காணப்படுமானால் இந்த வாக்குத்தத்தங்களை நாமும் சுதந்தரிக்கலாம்!

### 1. கபடற்றவர்களாயிருங்கள்

இயேசு நாத்தான்வேலைப் பார்த்து, 'இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன்' என்றார் (யோவான் 1:47). கபடு என்று இங்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ள மூல வார்த்தை, ஆதி.27:35-ம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அங்கு 'தந்திரம்' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆதியாகமம் 27ம் அதிகாரத்தில் யாக்கோபின் தந்திரம், கபடு, மாய்மாலம், வஞ்சனை மற்றும் ஏமாற்றும் குணத்தை காண்கிறோம். யோவான் 1:47-ல் இயேசு சொன்னதை இப்படி கூறலாம்- 'இதோ யாக்கோபின் குணம் இல்லாத உத்தம இஸ்ரவேலன்'. நாத்தான்வேலைப் போல நாமும் சகலவித கபடையும் களைந்து போடுவோம் (1 பேதுரு 2:2). எவனுடைய ஆவியில் கபடம் இல்லாமல் இருக்கிறதோ அவன் பாக்கியவான் என்று வேதம் கூறுகிறது (சங்.32:1). நம்மிடம் எந்த ஒரு துர்க்குணமும், கபடமும், பொய்யும், ஏமாற்றுதலும், வஞ்சகமும், மாய்மாலமும் காணப்படக்கூடாது (1தெச.2:3; 1பேதுரு 2:22; வெளி.14:5).

### 2. வேத வசனத்தினால் நிறைந்திருக்கும்

நாத்தான்வேல் வேதத்தை நன்றாக அறிந்தவனாக இருந்தான் (யோவான் 1:45). அத்திமரத்தின் கீழிலிருந்து வேதத்தை தியானித்து கொண்டு இருந்திருப்பான் என்று வேத பண்டிதர்கள் கூறுகிறார்கள். ஆதி.28:12 யை இயேசு அவனுக்கு ஞாபகப்படுத்துகிறார். பிலிப்புவும் நாத்தான்வேலும் பழைய ஏற்பாட்டில் மேசியாவைக் குறித்தும், அவருடைய வருகையை குறித்தும் ஆராய்ந்து அறிந்திருக்கிறார்கள். நாத்தான்வேலுக்கு வேதம் தெரிந்தபடியால், நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமோ என்ற நியாயமான கேள்வியை கேட்டான். ஏனெனில் பழைய ஏற்பாட்டில் நாசரேத்திலிருந்து இயேசு வருவார் என்று எங்கும் கூறப்படவில்லை. நாமும் பெரோயா பட்டணத்தாரைப் போல வேதத்தை நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும் (அப்.17:11). நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திலும் வேதம் என்ன சொல்லுகிறது என்பதை அறிந்து அதன்படி செயல்பட வேண்டும்.

### 3. விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்

நாத்தான்வேல் இயேசுவை தேவனுடைய குமாரன் என்றும் இஸ்ரவேலின் ராஜா என்றும் கண்டுக்கொண்டு அவரை முழு இருதயத்தோடும் விசுவாசித்தான் (யோவான் 1:49,50). அவரை உண்மையாக பின்பற்றுகிற சீஷனாக மாறினான். தேவனுடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரிப்பதற்கு விசுவாசம் திறவுகோலாக இருக்கிறது (எபி.6:11-12). விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்று இயேசு சொன்னார் (மாற்கு 9:23). நாம் விசுவாசித்தால் நிச்சயம் இதிலும் பெரிதான காரியங்களைக் காண்போம்! அல்லேலுயா!

---



"If Christians were putting into their spiritual walk the kind of discipline that athletes put into their chosen sport, the church would be pulsating with revival life."

-Warren Wiersbe



கர்த்தரின் ஈவாகிய இனிய மணவாழ்வு-4

# மணவாழ்வின் இன்பத்தை நிறைவாக அனுபவியுங்கள்-பகுதி 2


**Rev. Dr.T.S. ராஜசேகர்**

அகில இந்திய ஏ.ஜி பொது நிர்வாகக் குழு உறுப்பினர்


தேவசாயலில் ஆணும், பெண்ணுமாகப் படைக்கப்பட்டுள்ள மனுக்குலம் கணவன் மனைவியாக ஒருவரோடொருவர் ஒன்றித்து வாழும் மணவாழ்வின் இன்பத்தை நிறைவாக அனுபவிக்க வேண்டும் என்பது கர்த்தரின் திட்டமும் இனிய ஈவுமாகும். இதனைக் கவிதை வடிவில் வர்ணிக்கும் நூல் உன்னதப்பாட்டு. ஐந்து கவிதைகளின் தொகுப்பாகிய இந்நூலின் மையக் கவிதையின் இரண்டாம் பகுதியான, உன்.4:3-5:16ஐ கவிதை வடிவில் காண்போம்.

### மணவாளியை அழைத்தல் : 4:8-15

**4:8** என் மணவாளியே! லீபனோனிலிருந்து என்னோடுவா,
லீபனோனிலிருந்து என்னோடுவா,
அமனா மலைச் சிகரத்திலிருந்தும்
சேனிர், எர்மோன் மலை முகடுகளிலிருந்தும்
சிங்கங்களின் வாழ்விடமும் சிறுத்தைகளின் வசிப்பிடமுமான
மலைகளிலிருந்து இறங்கிவா.

**4:9** என் உடன் பிறந்தவளே! என் மணவாளியே!
நீ என் இதயத்தைத் திருடிக் கொண்டாய்.
உன் கண்களின் ஒரேபார்வையாலும்
உன் கழுத்தணியின் ஒருமணியாலும்
என் இதயத்தைத் திருடிக்கொண்டாய்.

**4:10** என் உடன்பிறந்தவளே! என் மணவாளியே!
உன் அன்புமிகவும் இன்பமளிக்கிறது.
திராட்சை மதுவைவிட உன் அன்புமிகவும் இனிமையானது.
உன் வாசனைதைலத்தின் நறுமணம்
அனைத்து நறுமணங்களைவிட மணமிக்கது.

**4:11** என் மணவாளியே! உன் உதடுகள் தேன்கூடுபோன்று
இனிமையைப் பொழிகின்றன.
உன் நாவினடியில் பாலும் தேனும் உள்ளன.
உன் உடைகளின் நறுமணம்
லீபனோனின் வாசனை போன்றுள்ளது.

**4:12** என் உடன் பிறந்தவளே! என் மணவாளியே!
நீ பூட்டப்பட்டதோட்டம்,
சுற்றிமறைக்கப்பட்ட நீரூற்று,
முத்திரையிடப்பட்ட கிணறு.

**4:13** உனது தளிர்கள் மாதுளந்தோப்பு
அதில் தரமான கனிகளும்
மருதோன்றி, நளதச் செடிகளும்

**4:14** நளதமும், குங்குமமும்
வசம்பும், இலவங்கமும்

அனைத்து நறுமண மரங்களும்
வெள்ளைப்போளமும், சந்தனமும்
தரமான நறுமணச் செடிகளும்
நிறைந்துள்ளதோப்பு.

4:15 நீ தோட்டத்தின் நீரூற்று,
லீபனோனிலிருந்து ஓடிவரும்
ஊற்றுத் தண்ணீர்க் கிணறு.

### மணவாளியின் அர்ப்பணம் 4:16

4:16 வாடைக்காற்றே எழும்பு!
தென்றலேவா!
நறுமணம் பரவும்படியாக
என் தோட்டத்தில் வீசு,
என் நேசர் தன் தோட்டத்திற்குள் வரட்டும்.
அதன் தரமான கனிகளை ருசிக்கட்டும்.

### மணவாளனின் ஏற்பு 5:1 a

5:1 a என் உடன் பிறந்தவளே! என் மணவாளியே!
நான் என் தோட்டத்திற்குள் வந்துவிட்டேன்.
என் வெள்ளைப் போளத்தையும்
நறுமண வகைகளையும் சேகரிக்கிறேன்.
என் தேன்கூட்டை என் தேனோடு உண்கிறேன்.
என் திராட்சை மதுவையும், என் பாலையும்
பருகிக்கொண்டிருக்கிறேன்.

### அனுபவிக்க வாழ்த்துக்கள் 5:1 b

5:1 b நண்பர்களே! உண்டு பருகுங்கள்;
நேசர்களே! நிறைவாகப் பருகுங்கள்.

### மணவாளியை அழைத்தல் 4:8-15

4:8 ஓர் ஆணின் திருமணத்திற்கு முந்திய தனித்த வாலிப வாழ்வைப் பாலைவனம் என்று 3;6 சித்தரிப்பது போன்று, ஒரு பெண்ணின் திருமணத்திற்கு முந்திய வாலிப வாழ்வை மலைவாழ்வாக 4:8 சித்தரிக்கின்றது. கணவனும் மனைவியும் தங்களது மணவாழ்வு, திருமணத்திற்கு முந்திய தனித்த வாலிபவாழ்வைக் காட்டிலும் மிகவும் மேன்மையானது என்று தங்கள் மனதில் மிகவும் அழுத்தமாகப் பதிப்பது, மணவாழ்வின் இன்பத்தை நிறைவாக அனுபவிப்பதற்கான முதல்படி, மனைவி தன் மணவாழ்வு தன் தாய்வீட்டில் வாழ்ந்த வாழ்வைவிட மிகவும் மேன்மையானது என்று எண்ணும்படியாகக் கணவனின் சொல்லும் செயல்களும் அமையத் தினமும் முயற்சி எடுக்க வேண்டும்.

4:9 கணவன் தன் மனைவியைத் தன் உடன் பிறந்தவளைப் போன்றும், தனது உரிமை வாழ்க்கைத் துணையாகவும் அழைப்பதும், நடத்துவதும், மனைவி மணவாழ்வைத் தன் தாய்வீட்டின் வாழ்வைக் காட்டிலும் மேன்மையானதாகக் கருதுவதற்கு வழிசெய்யும். மணவாழ்வின் இன்பத்தை அனுபவிப்பதைத் தன் தேவையை சந்திக்கும் ஒரு வேலையாகச் செய்யாமல் அந்த இன்பத்தை இருவரும் நிறைவாக அனுபவிக்கக் கணவன் தன் மனைவியை அதற்காக ஆயத்தப்படுத்த வேண்டும். அவளது உடலமைப்பையும், அலங்காரத்தையும், செயல்பாடுகளையும் அங்கீகரித்து வார்த்தைகளால் வர்ணிப்பது மனைவியை ஆயத்தப்படுத்துவதின்

முதல்படி. தான் அவளால் ஆட்கொள்ளப்பட்டிருப்பதையும், அவளது உரிமையான கனிவான பார்வையும், எளிய அலங்காரமும் கணவனை ஆட்கொள்ள வேண்டும்.

**4:10** கணவன் மனைவியின் மணவாழ்வின் உடலுறவு அன்பில் ஊறியதாக இருக்கவேண்டும். கணவனும் மனைவியும் ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கும் அன்பு இனிமையானதாக இருக்கும்போதுதான் மணவாழ்வின் இன்பம் நிறைவானதாக இருக்கும். இல்லையென்றால் அது இன்னொரு அலுவலாகவே தோன்றும். மணவாழ்வின் இன்பம் பார்த்தல், கேட்டல், முகர்தல், தொடுதல், ருசித்தல் ஆகிய மனித நுகர்ச்சிகள் அனைத்தையும் திருப்திப்படுத்தக் கூடியது. முதலாவது, கணவனும் மனைவியும் தங்கள் உடல்வாசனை அடுத்தவரைக் கவரக்கூடியதாக இருக்க முயற்சி எடுக்க வேண்டும், அவ்வாசனையை அனுபவிக்க வேண்டும்.

**4:11** கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் முத்தங்களால் ருசிக்க வேண்டும்.

**4:12-15** கணவன் தன் மனைவியின் உடல் உறுப்புகள் ஒவ்வொன்றையும் வார்த்தைகளால் வர்ணித்து, அனுபவித்து மனைவிக்கு இன்பத்தை அளிக்க வேண்டும். இதற்கென்று நேரமெடுத்துச் செயல்படுவது மனைவி முழுமனதோடு தன்னை விட்டுக் கொடுத்து இருவரும் நிறைவான இன்பத்தை அனுபவிக்க வழிசெய்யும்.

### மணவாளியின் அர்ப்பணம் 4:16

**4:16** தன் கணவனின் வர்ணிப்புகளாலும், இன்பநுகர்ச்சியாலும் கவரப்பட்ட மனைவி, மணவாழ்வின் இன்பத்தை இருவரும் நிறைவாக அனுபவிக்கத் தன்னைத் தன் கணவனுக்கு முழுமையாக விட்டுக் கொடுத்து ஒத்துழைப்பாள்.

### மணவாளனின் ஏற்பு 5:1a

**5:1a** மணவாழ்வின் இன்ப உறவு கணவன் மனைவி இருவருக்கும் நிறைவானதாக இருக்க, மனைவியைத் தன் வர்ணனைகளாலும், வசீகரச் செயல்களாலும் ஆயத்தப்படுத்தி அவள் தன்னை முழுமையாக அர்ப்பணிப்பதற்கு முன் கணவன் அவசரத்துடன் செயல்படுவது வெண்ணெய் திரண்டுவரும்போது தயிர்ப்பானையை உடைப்பது போன்றாகிவிடும், கணவனின் வர்ணிப்புகளும் அவசரமில்லாத செயல்பாடும் இருவரும் நிறைவான இன்பத்தை அனுபவிக்க வழிவகுக்கும். தனக்கு உரிமையானவளைத் தான் நிறைவாக அனுபவிக்கிறேன் என்று தெரிவிப்பது இருவரையுமே இன்பத்தில் ஆழ்த்தும்.

### அனுபவிக்க வாழ்த்துக்கள் 5:1b

**5:1 b** கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் கவர்ந்து, வர்ணித்து, மகிழ்ச்சிப்படுத்தி, அர்ப்பணிப்புடன் ஒருவரையொருவர் அனுபவிப்பது தேவதிட்டம். இதற்கு தேவனுடைய மற்றும் சமுதாயத்தின் அங்கீகரிப்பு உண்டு. தேவதிட்டமும், சமுதாய ஒழுங்கும் காக்கப்படவும், மணவாழ்வு இனிக்கும் தேனாக விளங்கவும் கணவனும் மனைவியும் ஒருமித்து சங்கமிப்பது வாழ்த்துதலுக்குரிய செயல்.

புதிதாகத் திருமாணமான நாட்களைப்போன்றே தங்கள் மணவாழ்வு முழுவதும் கணவனும் மனைவியும் இந்த இன்பத்தை நிறைவாக அனுபவிக்க தேவ அங்கீகரிப்பு என்றும் உங்களோடுண்டு.



# கிறிஸ்தவனின் ஓட்டம்


**Rev. V.J. பாலஸ்**

தலைமைப் போதகர், சிமிர்னா A.G. சபை, வண்ணாரப்பேட்டை


பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவன் கிருபையும் சமாதானத்தையும் உங்கள் வாழ்க்கையில் பெருகச் செய்வாராக.

"ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமா யிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" (எபிரெயர் 12:1).

கிறிஸ்தவ வாழ்க்கையை பந்தய ஓட்டத்திற்கு நிகராக பவுல் இங்கே எழுதுகிறார். கிறிஸ்தவ வாழ்க்கையென்பது ஒரே நிலையில் இருப்பதல்ல. அது பந்தய ஓட்டம்போல ஒரு இலக்கை நோக்கி ஓடிக்கொண்டே இருப்பது, நாம் செயல்படாமல் இருப்பதல்ல. ஒவ்வொருநாளும் இலக்கை நோக்கி ஆசையாய் தொடருவது, பலதடைகள் வரும் அதனை மேற்கொண்டு ஓட்டத்தை தொடரவேண்டும். இந்த வசனத்தில் "ஆகையால்" என்று ஆரம்பிப்பதன் அர்த்தமாவது அதற்கு முன்பதாக உள்ள மிக முக்கியமான காரியத்தின் தொடர்ச்சியாக எழுதப்பட்டு இருக்கிறது என்பதாகும். ஆகவே நாம் 11-ஆம் அதிகாரத்தை நாம் கவனமாக வாசிக்க வேண்டும். அதில் திரளான சாட்சிகள் எழுதப்பட்டிருக்கிறது. அந்த சாட்சிகளை நாம் கவனித்துப் பார்க்க வேண்டும்.

**பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு...**

அந்தகாலத்திலே ரோமா புரியிலே ஓட்டப்பந்தயம் மிகவும் விசேஷமாக நடைபெறும். அதைக் காண்பதற்கு ஏராளமான மக்கள் கூடி வருவார்கள். அந்த ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெறுவது மிகவும் மேன்மையாக எண்ணப்படும். ஆகவே அந்த ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொள்ளுகிறவர்கள் ஓட்டப்பந்தயம் நடைபெறுவதற்கு பல நாட்கள் முன்பதாக மிகவும் கடினமாக பயிற்சி எடுப்பார்கள். அவர்கள் தங்கள் கால்களிலே பாரமான இரும்பு வளையங்களை அணிந்துகொண்டு ஓடி பயிற்சி எடுப்பார்கள். அந்த ஓட்டப்பந்தயம் ஆரம்பிக்கும் அந்தநாளிலே அந்த பாரமான இரும்பு வளையங்களை எடுத்துவிட்டு மிகவும் இலகுவான வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு அவர்கள் ஓடுவார்கள். பந்தய ஓட்டத்திலே ஓடுகிறவர்கள் எப்படி அதற்கு முன்பதாக பயிற்சி எடுத்துவிட்டு ஓடுகிறார்களோ அதைப் போல நாம் ஆயத்தமாக ஓட வேண்டும்.

**நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையிலே நம்மை பாரப்படுத்துகிற காரணம் என்ன?**

நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையிலே தேவனுடைய சித்தத்திற்கு விரோதமான காரியங்கள் அதாவது இந்த வசனத்திற்கு புறம்பான காரியங்களை செய்யும்போது அது நமக்கு பாரமாக இருக்கிறது. ஆகவே இந்த பாரமான யாவற்றையும் விட்டுவிட்டு இலக்கை நோக்கி ஆசையாய் ஓட வேண்டும்.

**இந்த ஓட்டம் எப்பொழுது முடிவடைகிறது?**


இந்த வாழ்க்கை முடியும்போது இந்த ஓட்டம் முடிகிறது. பவுல் சொல்லும்போது... என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும்.... (அப்.20:24). நம்முடைய ஓட்டம் ஆரம்பித்ததிலிருந்து முடிக்கும் வரைக்கும். அந்த சந்தோஷம் நாளுக்குநாள் அதிகரிக்க வேண்டும். அது குறையக்கூடாது. நாம் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்று பரிசுத்தாவி பெற்றதிலிருந்து நம்முடைய ஓட்டம் ஆரம்பிக்கிறது. இரட்சிக்கப்படாதவர்கள் இந்த ஓட்டத்திலே பங்குபெறவில்லை. அவர்கள் வெறும் பார்வையாளர்களாகவே இருக்கிறார்கள். நீங்கள் இரட்சிக்கப்படாமல் சபைக்குச் செல்வீர்களென்றால் வெறும் பார்வையாளர்களாகவே இருக்கிறீர்கள். சபைக்கு வெறுமனே வந்துபோகிற அனுபவமே காணப்படும். ஆகவே, இந்த ஓட்டத்திலே பங்கெடுப்பது மாத்திரமல்ல ஓடிவெற்றி பெறவேண்டும். சிலர் பாதி ஓட்டத்திலேயே மயங்கிவிழுந்து விடுவார்கள். சிலர் அவர்களுக்கு நியமித்த ஓட்டத்திலிருந்து வழிவிலகி போய்விடுவார்கள்.

**நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில்...**

ஓடுகிறவர்கள் அவர்களுக்கு நியமித்த அந்த பந்தயச் சாலையில் ஓட வேண்டும். அதைவிட்டு வெளியே ஓடக்கூடாது. வெளியே ஓடினால் அவர்கள் வெற்றி பெற்றாலும் அவர்களால் பந்தயப் பொருளை பெற முடியாது. அதைப்போல இந்த வேதவசனம் நமக்கு நியமித்திருக்கிற அந்த எல்லைக்குள்ளே ஓட வேண்டும். ஆகவே நம்முடைய கிறிஸ்தவ ஓட்டத்திலே ஒவ்வொருநாளும் மிகவும் கவனமாக ஓட வேண்டும். நம்முடைய ஓட்டத்தை தடைசெய்கிற அல்லது திசை திருப்புகிற எது வந்தாலும் அதை தவிர்க்க வேண்டும் அல்லது தள்ளிவிடவேண்டும். ஆகவே உங்கள் வாழ்க்கையில் எவ்வளவு தடைகள், உபத்திரவங்கள், நிந்தைகள், அவமானங்கள் வந்தாலும் இலக்கை அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு ஓட வேண்டும். தேவன் உங்களை பெலப்படுத்தி ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

## உங்கள் இதயத்தை பாதுகாக்க சில வழிகள்



- தினமும் குறைந்தது 30 நிமிடங்கள் நடக்க பழகுங்கள்.
- புகைபிடிக்கும் பழக்கம் இருந்தால் அதை நிறுத்துங்கள்.
- உங்கள் உயர் இரத்தம் அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் போன்ற உடல் நல கோளாறுகளை மருத்துவரின் உதவியுடன் சீராக்குங்கள்.
- அதிக உடல் எடை இருப்பின் உணவுகட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சியின் மூலம் உடல் எடையை குறையுங்கள்.
- நார்ச்சத்து, தாது சத்துக்கள் (பழங்கள் மற்றும் காய்கறிகள்) நிறைந்த உணவை உட்கொள்ளுங்கள்.
- எண்ணெயில் பொறிக்கப்பட்ட, துரித உணவுகள் (Fast foods), மட்டன், மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி, Cheese, நெய், கொழுப்பு நிறைந்த பால், ஐஸ்கிரீம்களை உணவில் தவிர்த்து விடுங்கள்.
- கொழுப்பு சத்து குறைக்கப்பட்ட பால் பருகுங்கள். முட்டையின் மஞ்சள் கரு, இறைச்சியில் கல்லீரல், மூளை போன்ற பகுதிகளை உணவில் தவிர்த்துவிடுங்கள்.
- மிதமாக காபி அருந்துங்கள். 2-3 Cupகளுக்கு மேல் வேண்டாமே.
- எதற்கும் பதட்டப்படாத அமைதியான மனநிலையை உடையவராயிருங்கள்,

**தேவ நம்பிக்கையோடு வாழுங்கள்**

Dr.ஆண்டனி ஆரோக்கியராஜ்



# எஸ்தரின் சரித்திரம் (Esther)

## புத்தக அறிமுகம்

Rev. Dr. சாமுவேல் ராஜ் R.
All India National Director, Global University

யுத ஜனங்கள் எஸ்தர் என்ற யூத குல ராணியால் எப்படிப் பாதுகாக்கப்பட்டார்கள் என்பதைக் குறிக்கவும், யூதர்களுடைய பாரம்பரிய பண்டிகைகளுடன் பூரிம் என்ற புதிய பண்டிகை எவ்விதம் சேர்க்கப்பட்டது என்பதைப் பதிவிடவும் எஸ்தர் என்ற புத்தகம் எழுதப்பட்டது எனலாம்.

தேவனுடைய சர்வ ஆளுகையுள்ள பாதுகாப்பினை புறஜாதி ராஜாக்களின் அரசாளுகையிலும் தேவ ஜனங்கள் எவ்விதம் அனுபவித்தனர் என்பதையும் எஸ்தரின் சரித்திரம் நமக்கு விளக்கிச் சொல்லுகிறது.

**எஸ்தர் புத்தகத்தின் சரித்திரப் பின்னணியம்:**

கிமு536ம் ஆண்டில் பெர்சிய மன்னனாகிய கோரேசின் கட்டளைப்படி ஒரு கூட்டம் யூதர் செருபாபேலின் தலைமையில் யூதாவுக்கு திரும்பி வந்தனர் (எஸ்றா 1-6 அதி).

கிமு457ல் எஸ்றாவின் தலைமையில் அடுத்தக் கூட்ட யூதர் சுயதேசத்துக்குத் திரும்பி வந்தனர் (எஸ்றா 7-10 அதி).

மேற்கண்ட இரண்டு சரித்திர நிகழ்வுகளின் நடுவே, (அதாவது எஸ்றா 6-ம் அதிகாரத்துக்கும், 7ம் அதிகாரத்துக்கும் இடையில்) எஸ்தர் புத்தகச் சரித்திர சம்பவங்கள் நடந்தேறுகின்றன.

எனவே நமது வேதாகமத்தில் நெகேமியா புத்தகத்துக்கு அடுத்தப் புத்தகமாக எஸ்தர் புத்தகம் ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்தாலும், எஸ்தரின் சரித்திரம் நெகேமியா புத்தக நிகழ்வுகளுக்கு சுமார் 30 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பதை மனதிற்கொள்ளவேண்டும்.

எஸ்தரின் வீரதீர செயல்கள் அக்கால யூதகுல பாதுகாப்பிற்கு உத்தரவாதம் கொடுத்தது (எஸ்தர் 8:17;10:3). அதுவுமன்றி அதன்பின்பு பெர்சிய தேசமெங்கும் யூதர்கள் உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டனர். நெகேமியா அரண்மனையில் முக்கிய வேலையில் அமர்த்தப்பட்டதும், ராஜமரியாதையுடன் எருசலேமின் ஆளுநராய் அனுப்பப்பட்டதும் பல ஆண்டுகளுக்குமுன் எஸ்தர் யூதர்களுக்கென ஏற்படுத்திவைத்த பாதுகாப்பே ஆகும்.

**எஸ்தர் புத்தகச் சம்பவச் சுருக்கம்:**

பெர்சிய சாம்ராஜ்யத்தின் தலைநகரான சூசான் அரண்மனையில் எஸ்தர் புத்தக சம்பவங்கள் நடந்தன.

- யூதர் தங்கள் தேசத்திலிருந்து கிமு586-ல் சிறைக்கைதிகளாக பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு எழுபது ஆண்டுகள் அடிமைகளாய் சிறையிருப்பிலிருந்தனர். கிமு 538ல் பெர்சிய சாம்ராஜ்யம் தலைதூக்க, பாபிலோன் வல்லரசு வீழ்ச்சியடைந்தது. பெர்சிய மன்னனாகிய கோரேஸ் சிறையிருப்பிலிருந்த யூதருக்கு விடுதலையைக் கட்டளையிட்டான். அவர்கள் தங்கள் சொந்த தேசத்துக்குச் சென்று ஆலயத்தைக்கட்ட

அனுமதியளித்தான். அதன்படி கிமு536-ல் செருபாபேலின் தலைமையில் ஒருகூட்ட யூதர் எருசலேமுக்குத் திரும்பினர்.

- கிமு 457-ல் எஸ்றா இரண்டாவது கூட்ட யூதருடன் எருசலேமுக்குத் திரும்பினான்.
- கிமு 444-ல் நெகேமியா மூன்றாவது கூட்ட யூதருடன் எருசலேமுக்குத் திரும்பி வந்தான்.

எனினும் பெர்சியாவின் ஆளுகைக்கு உட்பட்ட மத்திய கிழக்கு தேசங்களிலெங்கும் சிதறியிருந்த யூதர் அனைவரும் சுயதேசத்துக்குத் திரும்பி வரவில்லை. தாங்கள் தங்கியிருந்த பெர்சிய சாம்ராஜ்ஜியத்தின் எல்லைகளிலேயே தங்கிவிட்டனர். எனினும் அங்கு யூதரனைவரும் பாதுகாப்பாய் இல்லை. யூதர் அனைவரையும் கொன்று அழிக்கத் திட்டமிட்ட மனிதரும் அங்கு இருந்தனர். அவர்களை அழித்துவிட மாபெரும் சூழ்ச்சி ஒன்று நடந்தது. அதனை முறியடித்த எஸ்தர் என்ற யூதப் பெண்ணைக் குறித்தும், அவளது பெரியப்பா மகன் மொர்தெகாய் என்ற யூதனைக் குறித்தும், யூத ஜனத்துக்குக் கிடைத்த மாபெரும் விடுதலையையும் விவரிக்கும் புத்தகமே எஸ்தரின் சரித்திரமாகும்.

### ஐந்து கதாபாத்திரங்கள்:

ஐந்து முக்கிய நபர்களை மையமாகக் கொண்ட இச்சரித்திரத்தில் கர்த்தரின் ஆளுகையையும், பாதுகாப்பையும் தெளிவுறக் காண்கிறோம்.

### 1.பெர்சிய ராஜாவாகிய அகாஸ்வேரு:

இந்த பெர்சிய மன்னன் கிமு 486 முதல் கிமு465 வரை பெர்சியாவை ஆண்டு வந்தான். அகாஸ்வேரு என்பது இவனுடைய எபிரெயப் பெயர். அர்த்தஷஸ்டா என்பது இவனுடைய கிரேக்க பெயர். கசயரசன் என்பது இவனுடைய பெர்சியப் பெயர்.

இவன் இந்தியா முதல் எத்தியோப்பியா (ஆப்ரிக்கா) வரை பரவியிருந்த 127 நாடுகளை ஆண்டு வந்தவன். எஸ்தர் புத்தகம் இவனது ஆட்சியின் கிமு 483 முதல் 473 வரையுள்ள காலங்களை உள்ளடக்கியுள்ளது, (எஸ்தர் 1:3;3:7). இவன் தனது முதல் மனைவி வஸ்திக்குப் பதிலாக யூதகுலத்துப் பெண்ணாகிய எஸ்தரைத் திருமணம் செய்தான். இவனுக்கு மனைவிகளுக்கும் குறைவில்லை, மறுமனையாட்டிகளும் எண்ணிக்கையிலடங்கா. மூர்க்கம் நிறைந்த இவனது ஆட்சிக்காலத்தில் கர்த்தர் தமது சர்வ ஆளுகையை எவ்விதம் வெளிப்படுத்தினார் என்பதைப் பார்க்கும்போது மெய்சிலிர்க்க வைக்கும் பக்தியை நமக்களிக்கிறது.

### 2.ஆமான்:

இவன் அகாஸ்வேரு ராஜாவின் பிரதம மந்திரியாயிருந்தான். இவன் யூதர்களின் எதிரியாய் செயல்பட்டான். சூசான் அரண்மனையில் பதவி உயர்வு பெற்ற இவன், அனைவரும் தன்னை தேவன் என்ற ஸ்தானத்தில் வைத்து வணங்க வேண்டும் என எதிர்பார்த்தான். யூதனாகிய மொர்தெகாய் அப்படிச் செய்யாதபடியால், மொர்தெகாயையும் அவனது குலம் முழுவதையும் அழிக்க ஆமான் திட்டமிட்டுச் செயல்பட்டான். ராஜாவையும் தன் வசப்படுத்தினான். ராஜ உத்தரவின்படி மொர்தெகாய் தூக்கிலிடப்படவும், ஆகாஸ்வேருவின் 127 நாடுகளிலுமுள்ள யூதரெல்லாரும் கொன்று அழிக்கப்படவும் சதித்திட்டம் தீட்டி செயல்படுத்தவும் துணிந்தான். எஸ்தரின் தலையீட்டால் அது தடுக்கப்பட்டு, மொர்தெகாய்க்கென ஆயத்தம்பண்ணப்பட்டிருந்த தூக்குமரத்தில் ஆமானே தூக்கிலிடப்படும்படி காரியம் மாறுதலாய் முடிந்தது.

இந்த ஆமான் எஸ்தர் 3:1-ல் ஆகாகியன் என அழைக்கப்படுகிறான். எனவே, 1சாமு.15:8-ல் குறிப்பிடப்பட்டுள்ள அமலேக்கிய ராஜாவின் குடும்பப் பின்னணியிலிருந்து வந்தவனாக இருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. அமலேக்கியர் பல நூறு ஆண்டுகள் இஸ்ரவேலருக்கு எதிர்த்து நின்றவர்கள் என்பதை இங்கு நினைவுகூரலாம் (உபா.25:17-19).

**3.வஸ்தி:**

எஸ்தருக்குமுன் ஆகாஸ்வேரு ராஜாவின் பட்டத்து ராணியாயிருந்தவள். 'அழகுள்ளவள்' என்பது இவளது பெயரின் அர்த்தம். பெயருக்கேற்ற பேரழகியாயிருந்தாள். அழகுக்கு எதிரான ஆணவமும் அகங்காரமும் கொண்ட இவள், புருஷனுக்குக் கீழ்படியாதபடியால் பட்டத்து ராணி என்ற அந்தஸ்தை இழந்தாள்.

**4.எஸ்தர் :**

இவள்தான் இப்புத்தகத்தின் கதாநாயகி. இவள் யூதா தேசத்திலிருந்து அநாதையாய் சிறைப்பிடித்துக் கொண்டு வரப்பட்டவள். மொர்தெகாய் என்ற அவளுடைய ஒன்றுவிட்ட சகோதரனால் வளர்ப்பு மகளாகத் தத்தெடுக்கப்பட்டவள். அத்சாள் என்பது இவளது யூதப்பெயர் எஸ்தர் என்பது இவளது பெர்சியப் பெயர். தேவ தீர்மானத்தின்படியே பெர்சிய தேசத்துக்கே ராணியாக வந்தாள். மொர்தெகாயின் ஆலோசனைப்படியே தனது குலப்பின்னணியை ராஜாவுக்கு அறிவிக்காதிருந்தாள். ஆனால், தனது யூதக்குலத்துக்குப் பேரழிவு வருகிறதைக் கண்டவள், தனது பூர்வோத்திரத்தை மறைக்காமல், துணிந்து நின்று, உபவாசித்து, ஜெபித்து விவேகத்துடன் செயல்பட்டு தனது குலத்தை அழிவினின்று காத்தாள்.

**5.மொர்தெகாய்:**

'சின்னமனுஷன்' என்பது இவனது பெயரின் அர்த்தம். எனினும் பெரிய மனுஷனாய் செயல்பட்டான். கர்த்தரின் பராக்கிரமனாய் எழுந்து நின்றான். பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவன் (சவுல் ராஜாவின் கோத்திரம்). அடிமையாய்ச் சிறைப்பட்டிருந்த இவன் சூசான் அரண்மனையில் வேலைசெய்து வந்தான். ஆமான் யூதர்களை அழிக்கத்திட்டமிட்டான். அவனது சதி ஆலோசனைகள் அனைத்தையும் முறியடிக்க எஸ்தருடன் சேர்ந்து செயல்பட்டான். பூரிம் என்ற யூதருடைய புதிய பண்டிகை இவன்மூலம் ஏற்படுத்தப்பட்டது.

எகிப்திலிருந்து விடுதலைபெற்ற நிகழ்வில் பஸ்கா ஏற்படுத்தப்பட்டது. அப்படியே யூதர்கள் ஆமானின் சதியிலிருந்து விடுதலை பெற்றதை நினைவுகூர பூரிம் பண்டிகை ஏற்படுத்தப்பட்டது.

## எஸ்தர் புத்தகத்தின் கருப்பொருள் வசனங்கள்

**எஸ்தர் 4:14**

நீ இந்த காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்கு சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள். நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்.

**எஸ்தர் 4:16**

இவ்விதமாய் சட்டத்தை மீறி இராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன்.

எஸ்தருக்கு இருந்த பலத்த விசுவாச உறுதி; இன்று நமக்கு மிகப்பெரிய மிஷனெரி சவாலாக இவ்வசனங்களில் தரப்பட்டுள்ளன. மொத்தம் பத்து விருந்துகள் (Feast) நடப்பதை இப்புத்தகத்தில் நாம் வாசிக்கிறோம். ஆனால் எஸ்தரும் மொர்தெகாயும் அழைப்பு விடுத்து அனுசரித்த மூன்று நாள் உபவாசம் (Fast) விருந்துகள் எல்லாவற்றையும் விஞ்சிவிட்டன; அவை மிஞ்சி பதில் தந்தன என்பதையும் காண்கிறோம்.

**எஸ்தர் புத்தகம் நமக்குக் கற்றுத்தரும் பாடம் என்ன?**

**கர்த்தர் சர்வ ஆளுமையுள்ளவர்**

தமது ஜனங்கள் எங்கிருந்தாலும் அவர்களைப் பாதுகாப்பார். நாம் அவர்மீது வைக்கவேண்டிய அன்பையும் விசுவாசத்தையும் விட்டுவிடாதிருக்க வேண்டும்.

தாறுமாறாய் செல்லுகிற நமது இன்றைய சமுதாயத்தில் கர்த்தரை நோக்கி ஏறெடுக்கும் ஜெபத்துக்கும், உபவாசத்துக்கும் தீர்க்கமான பதில் என்றும் உண்டு.

நாம் செய்யவேண்டியதை விசுவாசத் துணிவுடனும் தேவபக்தியுடனும் செய்யத் துணிவுள்ளம் கொண்டு செயல்பட வேண்டுமென கர்த்தர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார்.

**எஸ்தர் புத்தகத்தின் பொருளடக்கம்:**

1. அகாஸ்வேரு ராஜாவின் விருந்தும் எஸ்தர் ராணியாய் தெரிந்துக்கொள்ளப் படுதலும், 1-2 அதி.
2. மொர்தெகாய்க்கும் அவனுடைய யூத குலத்துக்கும் எதிராய் செய்யப்பட்ட ஆமானின் சதியும் எஸ்தரின் விண்ணப்பமும், 3-5 அதி.
3. முறியடிக்கப்பட்ட ஆமானின் சதியும் மொர்தெகாய் உயர்த்தப்படுதலும், 6-8 அதி.
4. பூரீம் பண்டிகை ஏற்படுத்தப்படுதல், 9-11 அதி.

ஆமான்கள் இன்றும் உண்டு. ஆமானின் சொல்கேட்டு மதியீனமாய் செயல்படும் அகாஸ்வேரு-கள் இன்றும் ஏராளம். ஆனால் தம் ஜனத்தை விடுவிக்க அக்கரையுள்ள மொர்தெகாய்-கள் அதிகம் தேவை.

தன் உயிரையும் துச்சமாய் மதித்து, திட்டமிட்டு செயல்படும் மொர்தெகாய்க்குக் கீழ்படியும் எஸ்தர்கள் இன்னும் தேவை.

---

**உங்களுக்கு தெரியுமா?**

**உலகம் முழுவதும்**

- ஒரு நிமிடத்திற்கு 105 பேர் மரிக்கிறார்கள்.
- ஒரு நாளைக்கு 1,51,000 பேர் மரிக்கிறார்கள்.
- ஒரு ஆண்டில் 5 கோடியே 53 லட்சம் பேர் மரிக்கிறார்கள்.
- இதில் 6% மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களாய் இருக்கிறார்கள்.
- ஒரு நிமிடத்திற்கு 9 விசுவாசிகளும் 147 அவிசுவாசிகளும் மரிக்கிறார்கள்.

**ஒரு நிமிடத்திற்கு 80 பேர் இயேசு இல்லாமல்**
**நித்திய அழிவுக்குப் போகிறார்கள்**

***உங்கள் பங்கு என்ன?***
***நற்செய்தி அறிவிக்கப் பயிற்சி பெறுங்கள்!***

Jesus said, "Go into all the world" (Mk 16:15)
The world begins where your frontyard ends



# நித்திய நோக்கம்


## Dr. ராணி ஜெயச்சந்திரன்

நிர்வாகக்குழு உறுப்பினர், தமிழ் பிரதேசப் பெண்கள் ஊழியம்


ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

இந்த மாதத்திலிருந்து நாம் தேவனுடைய முழு இரட்சிப்பை குறித்து தியானிக்க இருக்கின்றோம். எபிரெயர் 2:3,4. முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும் தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சிகொடுத்தது மாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப் போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம். இரட்சிப்பு என்பது சாதாரணமானது அல்ல. ஆண்டவர் என்னை இரட்சித்தார் என்று இலகுவாக சொல்லிவிடுகிறோம். வேதம் சொல்கிறது பெரிதான இரட்சிப்பு என்று.

### தேவனுடைய விருப்பம்

ஆதியாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். இந்த வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பாகவே ஆண்டவருக்கு ஒரு விருப்பம் இருந்தது. எபேசியர் 1:4-ல் வசனம் சொல்கிறது. தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவருக்கு ஒரு விருப்பம் இருந்தது, என்ன விருப்பம்? அவர் தனியாக இருந்தார். அவருக்குத் தன்னை வெளிப்படுத்த வேண்டும் என்ற ஒரு விருப்பம் வந்தது. அந்த விருப்பம் வந்தவுடனே ஒரு திட்டம் பண்ணினார். அந்த திட்டத்திற்கு பெயர் தான் நித்திய நோக்கம். அவரைப் போலவே ஒரு கூட்ட ஜனங்களை உண்டாக்கி அவருடைய சாயலின்படியும் அவருடைய ரூபத்தின்படியும் உருவாக்க வேண்டும். சாயல் என்றால் அவருடைய குணாதிசயங்கள், (Inward Nature), அவருடைய பரிசுத்தம் நீதி, அன்பு, வெளிச்சம் எல்லாம்.அவருடைய ரூபம் என்றால் வெளித்தோற்றம். மனிதர்கள் ஒருவனும் ஒருகாலமும் அவரை கண்டதில்லை. ஆனால் வேதம் சொல்லுகிறது அவர் கரத்தை நீட்டினார் என்று. அப்படியென்றால் அவருக்கு ஒரு உருவத்தோற்றம் இருந்தது. அதைப்போலவே தம்முடைய சாயலின்படியும் தன்னுடைய ரூபத்தின்படியும் மனுஷனை உண்டாக்கி அந்த மனிதனுக்குள்ளே அவருடைய ஆவி இருக்க வேண்டும். அந்த மனுஷன் மூலமாக தன்னை வெளிப்படுத்த வேண்டும். தன்னுடைய ஜீவனும் வெளிப்பட வேண்டும். அவருடைய ஆளுகையும் வெளிப்பட வேண்டும். இதுதான் ஆண்டவருடைய திட்டம். (This is called Eternal purpose).

### தேவனின் திட்டம் எப்படி நிறைவேறியது

இந்த திட்டத்தை தேவன் எப்படி நிறைவேற்றினார்?, உதாராணமாக நீங்களும் உங்கள் நண்பர்களெல்லாம் சேர்ந்து பிக்னிக் போகலாம் என்று ஒரு விருப்பம் வருகிறது. உடனே திட்டம் பண்ணுகிறீர்கள். எந்த இடத்திற்கு போகலாம்? எப்படிப் போகலாம்? என்னவெல்லாம் செய்யலாம் என்று அந்த இடத்திற்கு எப்படிப் போகலாம்? கார்ல போகலாமா? பஸ்ல போகலாமா? அது எப்படி எல்லாரும் சேர்ந்து போகலாம். அதை எப்படி நீங்கள் செயல்படுத்துகிறீர்கள். அதைப்போல ஆண்டவருக்கு ஒரு விருப்பம் வந்தது. அந்த

விருப்பத்தோடு ஒரு திட்டம் வந்தது. தேவன் மனுஷனுக்குள் பரவ வேண்டும், கலக்க வேண்டும், விநியோகிக்கப்பட வேண்டும். தேவன் வெளியே இருக்கிறார். அவர் மனுஷருக்குள்ளே வர வேண்டும். ஆனால் நம்முடைய தேவன் ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவர், ஒருவரும் காணக்கூடாதவர், பட்சிக்கிற அக்கினி. அவர் நேரடியாக நமக்குள்ளே வர முடியாது. அதனால் ஆண்டவர் எப்படி திட்டம் பண்ணினார் என்றால் அவருடைய ரூபத்தின்படியும், அவருடைய சாயலின்படியும், மனுஷனை உண்டாக்கி ஏதேன் தோட்டத்தில் ஜீவ விருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் உண்டாக்கி நீங்கள் எல்லா கனியும் புசிக்கலாம். ஆனால் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்கக் கூடாது என்று சொன்னார். நீங்கள் யோசிக்கலாம், எதற்காக ஆண்டவர் இந்த பூமியில் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை வைத்தார். ஜீவ விருட்சத்தை மட்டும் வைத்திருக்கலாமே என்று.

### தேவனின் சத்துரு

ஆதியாகமம் 1-ம் அதிகாரத்தில் ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். லூசிபரும் அவனை சேர்ந்த கூட்டங்களும் தேவனுக்கு விரோதமாய் எழும்பி கீழே தள்ளப்பட்டு போனார்கள். அதனால் ஆண்டவர் உண்டாக்கின பூமி எல்லாம் ஆழங்களுக்குள் மறைந்து விட்டது. ஒரு சாபம் உலகத்தில் வந்தது. ஆண்டவர் அவர் திட்டத்தை மாற்றவில்லை. மாறாக ஆண்டவர் வெட்டாந்தரை காணப்படக்கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று.

ஆண்டவர் மனுஷனை உருவாக்கி அவனுக்கு ஒரு சாய்ஸ் கொடுத்தார். இதை நீ புசித்தால் தான் அந்த பழத்தின் மூலமாக என்னுடைய ஜீவன் உனக்குள்ளே வரும். ஆதாம் என்ன செய்திருக்க வேண்டும். அந்த ஜீவ விருட்சத்தின் கனியை புசித்து இருந்தால் திட்டமே மாறி இருந்திருக்கும். ஆனால் பிசாசு தந்திரமாய் வந்து அந்த பழத்தை நீ புசித்தால் நீ சாக மாட்டாய்; நீ தேவர்களைப் போல் ஆவாய் என்று அவனுக்கு சொன்னபடியால் வஞ்சிக்கப்பட்டு ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தார்கள். ஆண்டவருடைய திட்டத்தை நிறைவேற்றப்போகிற நேரத்தில் பிசாசினுடைய தந்திரம் மனிதனை வஞ்சித்தது. மனிதன் பாவம் செய்துவிட்டான். பிசாசு அவனுடைய ஜீவனாகிய விஷத்தை ஏத்திவிட்டான். தேவனுடைய ஜீவனால் நிரப்பப்பட வேண்டிய மனிதன் பிசாசினுடைய ஜீவனால் ஆட்கொள்ளப்பட்டான். பிசாசினுடைய தன்மைகள் எல்லாம் மனிதனுக்குள் வந்துவிட்டது. ரொம்ப பரிதாபத்திற்குரிய ஒரு சூழ்நிலை.

### தேவனின் பெரிதான திட்டம்

நம்முடைய ஆண்டவர் ஒரு நாளும் தோற்றுப்போகிறவர் அல்ல. எதைக்குறித்தும் சோர்ந்து போகிறவர் அல்ல. மறுபடியும் விழுந்துபோன தம் பிள்ளையை சத்துருவின் பிடியிலிருந்து அவனை மறுபடியும் விடுவித்து அவன் மூலமாக தன்னுடைய திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று God took an action. அவர் ஒரு திட்டத்தை மறுபடியும் எடுத்தார். விழுந்துபோன மனுஷனை ஆண்டவர் புறக்கணியாமல் அவருடைய அன்பு மறுபடியும் அவனை தம்மண்டைக்கு கொண்டுவர ஆண்டவர் எடுத்த விலையேறப்பெற்ற ஒரு பெரிதான திட்டம் தான் இரட்சிப்பு. உலகத் தோற்றத்திற்கு முன்பே கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார். எல்லாவற்றையும் உருவாக்கினார். நம்மையும் உருவாக்கினார். ஜீவ விருட்சம் என்பது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. அந்த தேவாதி தேவனை நம்முடைய வாழ்க்கையிலே நாம் புசிக்கும்பொழுது அவர் நமக்குள்ளே வருகிறார். நாம் அவரை Enjoy பண்ண முடியும். நாம் அவரை அனுபவிக்க முடியும். இதுதான் கிருபை என்று சொல்லுகிறோம். ஆண்டவருடைய ஜீவன் நேரடியாக உனக்குள்ளே வந்தால் நம்மால் தாங்க முடியாது. அக்கினி நம்மை எரித்துவிடும். அந்த அக்கினியை நம்மால் அனுபவிக்க முடியாது. ஆனால் இந்த கிருபையாகிய இயேசு கிறிஸ்துவை அனுபவிக்க முடியும். இதைக்குறித்து வருகிற நாட்களில் இன்னும் ஆழமாக தியானிக்க இருக்கிறோம்.

தொடரும்.....



# புருஷராயிருங்கள்

## Rev.Dr. ஆலன் பிராஸ்பர்

Director - Men's Fellowship,
Presbyter - Pondy North Section

விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள் (1 கொரிந்தியர் 16:13).

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து மக்களுக்கு தனது இறுதி பகுதியில் ராணுவப் படையில் இருக்கும் அதிகாரி அதிகார பூர்வமாய் பேசுவது போல குரலை உயர்த்தி பேசுகிறார். அவை பதவியில் இருந்து ஒரு அதிகாரி உரக்க சத்தமாய் கட்டளையிடும் தொனி போல் தொனித்தது. அந்த அதிகாரம் முழுவதிலும் ஒரு இராணுவ உருவகம் இருப்பதை நாம் காண்கிறோம். சத்துரு உன்னை நெருங்காமல் இருக்க, நீ விழித்திரு; அவன் உன் பக்கத்தில் வரும்பொழுது, அவனை எதிர்த்து போராட ஆயத்தப்படு. பிளவுகளும் பிரிவுகளும் கொண்ட ஒரு சபைக்கு அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய கடைசி அதிகாரத்தில் உயிர்த்தெழுதலின் வல்லமையும், தேவனுடைய ராஜ்யத்தில் மாமிசத்திற்கு முன்னுரிமை இல்லை என்றும் விளக்குகிறார்.

1 கொரிந்தியர் 13-ம் அதிகாரத்தில் அன்பை முக்கிய மையப் பொருளாக கொண்டு விளக்கிய அப்போஸ்தலனாகிய பவுல் மீண்டும் 16-ம் அதிகாரம் 4-ம் வசனத்தில் கிறிஸ்துவில் உறுதியாய் இருக்க அதிகார பூர்வமாய் குரலை உயர்த்துகிறார். அங்கே புருஷராயிருங்கள் என்ற சொல் அதிகார பூர்வமான தொனியில் கூறப்படுவதை நாம் காண்கிறோம். அதே அதிகாரத்தின் தொனியை அடையாளம் பார்த்தோமானால் கிறிஸ்துவினுடனே வெற்றிகரமாக தோல்வி யடையாது பயணிக்க தகப்பனின் உண்மையான அறிவுரை தெளிவாகிறது.

பவுல் மூன்று பிரதேசங்களைக் குறிப்பிடுகிறார் (1கொரி.16:1,5&8). இதோடு முக்கியமாக மூன்று நபர்களையும் குறிப்பிடுகிறார். இவ்விரண்டும் சேர்ந்து புருஷராயிருங்கள் என்ற வார்த்தையின் அர்த்தத்தை அளிக்கிறது.

### மூன்று பிரதேசங்கள் அளிக்கும் வாழ்க்கையின் குறிப்புக்கள்

#### கலாத்தியர்

கலா.2:10 தரித்திரரை நினைத்துக் கொள்ளும்படிக்கு மாத்திரம் சொன்னார்கள்; அப்படிச் செய்யும்படி அதற்கு முன்னமே நானும் கருத்துள்ளவனாயிருந்தேன். பவுலும் அவரின் தலைமைத்துவமும், சீஷரெல்லாரையும் திடப்படுத்துவதாகவே இருந்ததை நாம் காண்கிறோம். புருஷராயிருங்கள் என்று கலாத்திய மக்களுக்கு கூறியவை இப்பொழுது கொரிந்து மக்களுக்கும் பொருந்தும். விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள் (அப்.2:44). முன்பு செழிப்பாக இருந்த எருசலேம் தேவாலயம் துன்புறுத்தல் மற்றும் பஞ்சத்தின் காரணமாக சிதறி போனது. ‘அந்த நாளில், எருசலேமிலிருந்த சபைக்குக் கடுமையான துன்புறுத்தல் வந்தது; அப்போஸ்தலர்களைத் தவிர மற்ற எல்லாரும் யூதேயா, சமாரியா பகுதிகள் முழுவதும் சிதறிப்போனார்கள் (அப்.8:1). இப்போது அந்தியோக்கியன் எழுப்புதலுக்கு பின் பலவீனமாகத் தோற்றமளித்தது (அப்.11:28-30). தேவன் பெலவீனமான

பாண்டமாய் கருதப்படுபவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அக்கறை காட்டுவதில் அவர் உண்மையுள்ளவர் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். சமூக சேவை பணியை போல, பொருளாதார நிலை பிரச்சனையை மட்டும் இல்லாமல் பஞ்சத்தின் காலத்தில் மக்களுக்கு உதவுவதற்கு பொறுப்புள்ளவராகவும், தரிசனம் உள்ளவராகவும் மற்றும் தேவனின் கிருபையில் உள்ள உண்மையான பற்றினை காண்பிக்கிறது.

### மக்கெதோனியா

மக்கெதோனியா பட்டணமானது தேவன் இடைபடும் ஸ்தலமாகவும், அதே நேரத்தில் முரண்பாடுகள் உள்ள ஸ்தலமாகவும் காணப்பட்டது. பவுல் தரிசனத்தில் மக்கெதோனியாவுக்கு வரும்படி ஒரு மனிதன் கெஞ்சிக்கேட்டான் என்று கண்டபொழுது அவன் லீதியாள் என்னும் ஒரு ஸ்திரீயை ஆற்றோரமாக கண்டார். சிறை காவலாளி இறந்துபோவான் என்று எதிர்பார்க்கப்பட்டபொழுது, அவன் ஞானஸ்நானம் பெற்றான். ஊழியத்தின் பாதையில் துன்புறுத்துதல் ஏற்பட்டு சோர்வடைய செய்வதற்கு முன்பே லீதியாளின் வீட்டில் சபையானது ஸ்தாபிக்கப்பட்டு இருந்தது (அப்.16:40). மாம்சீக எண்ணங்களின் முரண்பாடுகளை ஒருபோதும் அற்புதவிதமான தேவத்திட்டத்திற்கும், குறுக்கிடுதலுக்கும் ஒப்பிட முடியாது என்பது புருஷராயிருங்கள் என்ற வார்த்தைக்கு அர்த்தமாயிருக்கிறது.

### எபேசு

எபேசு பட்டணமானது எதிர்ப்புகளும் வாய்ப்புகளும் நிறைந்த பட்டணமாக காணப்பட்டது. எபேசு பட்டணத்திலிருந்து தான் அப்போஸ்தலனாகிய பவுல் 1கொரிந்தியர் நிருபத்தை எழுதி இருக்கக்கூடும். பெந்தெகொஸ்தே அனுபவம் மற்றும் எருசலேமையும் தொடர்புபடுத்தும் வண்ணமாக எதிர்ப்புகளும் வாய்ப்புகளும் நிறைந்த காரியங்கள் அங்கே கூறப்பட்டுள்ளன. அப்.2-ஆம் அதிகாரத்தில் இருந்து இவை தொடர்கின்றன. எங்கெல்லாம் பெந்தெகொஸ்தே அனுபவம் இருக்கிறதோ அங்கெல்லாம் எதிர்ப்புகளையும் காண்கிறோம். ஆனாலும். அறுவடையை தேவன் காணச்செய்தார். ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதற்கும், சபைகள் ஸ்தாபிப் பதற்கும், முரண்பாடான சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல், தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கும், நமது பெந்தெகொஸ்தே அனுபவத்தை எதிர்பார்க்கிற 'புருஷராயிருங்கள்' என்பது நவீன சபைகளுக்கு ஒரு அழைப்பாக இருக்கட்டும்.

## வாழ்வின் மறுரூபத்தின் ஆதாரமாக மூன்று புருஷர்கள்

### தீமோத்தேயு

1கொரி.16:10-11 தீமோத்தேயுவை குறித்து கொரிந்து சபைக்கு பவுல் பாராட்டினவிதம் தீமோத்தேயுவின் முன்மாதிரியான குணத்தை குறிக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுலை ஊழியத்தின் பாதையில் அவர் பின்பற்றி வந்ததால் பவுலை குறித்து உள்ள எதிர்பார்ப்பில் கொஞ்சமும் குறைந்தவன் அல்ல, (1தீமோ.4:12). 1கொரி.16:10-11 இந்த இரண்டு வசனங்களில், மூன்று குணாதிசயங்கள் காணப்பட்டுள்ளன. கர்த்தருடைய கிரியையை நடப்பிக்கிறவனாய், ஊழியத்தின் பாதையில் பயனுள்ள பாத்திரமாய், அற்பமாய் எண்ணப்படாதவனாய் கூறப்பட்டுள்ளது. புருஷராயிருப்பது என்பது ஊழியத்தின் பின்னணியில் ஒரு சேவையை தாண்டி ஒருவரின் குணம், இணைந்து செயல்படும் விதம் மற்றும் உறுதியான தாக்கத்தை குறிக்கிறது.

### அப்பொல்லோ

1 கொரி.16:12;1:12;3:22 அப்போஸ்தலர்களின் பட்டியலில் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையின் பிரிவினையை சுட்டிக்காட்டும்பொது

அப்பொல்லோவை குறித்து கூறப்பட்டுள்ளது. ஆக்கில்லா பிரிஸ்கில்லாவால் சீஷனாக்கப்பட்டவன் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை யூதர்களிடையே பிரசங்கித்தான். சுவிசேஷ ஊழியத்திற்கு பின்பதாக சேர்ந்தாலும், அப்பொல்லோவின் திறனை குறித்து பவுல் அவ்வப்போது அங்கீகரித்து கொண்டே இருந்தான். பவுலும் தீமோத்தேயும் இளகிய மனதை உடையவர்களாய் காணப்பட்டனர். ஆனால், அப்பொல்லோவோ, திடமனதுடன் துள்ளியெழும் தன்மையுடையவனாக காணப்பட்டான். தெளிவான தீர்மானங்கள் எடுப்பதில் அவன் சிறந்தவனாக இருந்தான். கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிப்பதில் தனித்துவம் உடையவனாக காணப்பட்டான் என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார். பவுலின் கொரிந்து சபையில் சீர்திருத்த பணியில் ஏற்படக்கூடிய தேவையற்ற புகழ் அல்லது குழுவாதத்தைத் (GROUPISM) தவிர்ப்பதற்காக அப்பொல்லோ கொரிந்துவிலிருந்து விலகி இருந்தார். அப்பொல்லோ பவுலுக்கு விசுவாசமாக இருந்ததை இது நிரூபிக்கிறது. 'புருஷராயிருங்கள்' என்பது சர்ச்சைகளின்போது தங்களை நிதானிக்கிறவர்களாய் இருக்கவும், சுயமகிமையை தேடாமலும், இரட்சகராகிய இயேசுவுக்கு உண்மையாக இருங்கள் என்று அர்த்தமாகிறது.

### பவுல்

சந்தேகத்திற்கு இடமின்றி அப்போஸ்தலனாகிய பவுல் தான் சிபாரிசு செய்தவர்களில் மிக முக்கியமானவர். சபைகளை திருத்துவதற்கான தனித்துவமான அணுகுமுறை, தன்னை கேலி செய்பவர்களை எதிர்க்கும் துணிச்சல், நற்செய்தியின் சக ஊழியர்களிடையே ஒரு தோழமைப் பண்பு போன்றவைகள் புருஷராயிருங்கள் என்ற சொல்லை சித்தரிக்கின்றது.

### சுருக்கம்

**1 கொரி.16ன் பின்னணியில் உள்ள புருஷராயிருங்கள்**
**என்ற இந்த புரிதல்களை சுருக்கமாக கூறினால்**

1. கிறிஸ்துவின் அன்போடு உண்மையான அக்கறை காட்டுவது.
2. மாமிச முயற்சிகள் தோல்வியடையும்போது தேவ குறுக்கிடுதலை எதிர்பார்ப்பது.
3. எதிர்ப்புகளில் கவனம் செலுத்துவதை விட வாய்ப்புகளை பயன்படுத்துவது.
4. குணாதிசயம், இணைந்து செயல்படுதல் மற்றும் தாக்கத்தை ஏற்படுத்துவது ஆகிய குணங்களை முன்வைப்பது,
5. தேவனுக்கும், சக ஊழியர்களுக்கும் உண்மையாக இருப்பது, சுயமகிமையை யைத் தேடாமளிருப்பது.
6. நற்செய்தியின் பணிக்கான திறமையை அங்கீகரித்து விசுவாசத்தில் தொடர்வது,
7. உக்கிராணத்துவம், கணக்கு ஒப்புவித்தலும் உண்மையான புருஷர்களின் அடையாளம் ஆகும்.

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000.** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

# சபையில் எப்படி நடந்து கொள்வது?

**1. சபை ஒரு குடும்பம் (எபேசி 3:15; 4:6)**

ஆகவே நாம் ஒருவரை ஒருவர் நம்புவதுடன், ஒருவரை ஒருவர் மதித்தும், (ஒத்துழைத்தும்) வாழ வேண்டும்.

**2. சபை ஒரு ஐக்கியம் (அப் 2:42-45 ; 1 யோவான் 1:3)**

ஆகவே நாம் நம்முடைய செல்வங்களையும் மற்ற ஆசீர்வாதங்களையும் மற்றவர்களோடு பகிர்ந்தும் மற்றவர்களின் பிரச்சனைகளிலும், துன்பங்களிலும் தாங்கவும் வேண்டும்.

**3. சபை ஒரு சரீரம் (1 கொரி 12:12,17 ; எபேசி 4:16)**

ஆகவே அவயவங்களாகிய நாம் சுயநலமில்லாமல் ஒருவர் மீது ஒருவர் அக்கறை கொள்வதுடன், அன்புடனும் இரக்கத்துடனும் பலவீனமானவர்களுக்கு உதவ வேண்டும்.

**4. சபை ஒரு கட்டிடம் (எபேசி 2:19-22 ; 1 கொரி 3:9)**

ஆகவே ஜீவனுள்ள கற்களாகிய நாம், தேவன் நம்மை வைத்துள்ள இடத்தில் தாழ்மையுடனும், மகிழ்ச்சியுடனும், யாரையும் வெறுக்கமாலும் தற்பெருமை கொள்ளாமலும் இருக்க வேண்டும்.

**5. சபை ஒரு பள்ளி (எபேசி 3:18,19 ; 4:11-14)**

ஆகவே நாம் தேவனை அறியும் அறிவில் வளரவும், பூரண புருஷராகவும் பரிசுத்தவான்களின் கூடுகையைத் தவிர்த்தல் கூடாது.

**6. சபை ஒரு மந்தை (1 பேதுரு 2:25 ; 5:2-5)**

ஆகவே நாம் தன்னிச்சையாக செயல்படாமல், மற்றவர்களைச் சார்ந்தும், நாம் எல்லாக் காரியங்களிலும் ஒத்துழைப்பதுடன், நம் ஆத்தும மேய்ப்பரைப் பின் தொடர வேண்டும்.

**7. சபை ஒரு வீடு (1 திமோ 3:15 ; எபி 3:6)**

ஆகவே அவ்வீட்டிலுள்ளோரை தேவன் ஆசீர்வதிக்கும் பொருட்டு கிறிஸ்துவை அறியும் அறிவாகிய சுகந்த வாசனையால் அதை நிரப்ப வேண்டும்.

**8. சபை ஒரு பண்ணை (1 கொரி 3:9 ; எபி 6:7-12)**

ஆகவே நாம் அதிக கனி தரும் பொருட்டு பரிசுத்த ஆவியானர் அதிகமதிகம் ஊற்றப்பட்ட அனுபவத்தைப் பெற வாஞ்சிக்க வேண்டும்.

**9. சபை ஒரு சேனை (எபேசி 6:12 ; 2 கொரி 10:3-6 )**

ஆகவே நாம் சத்துருவின் தாக்குதலுக்குக் கவனமாயிருந்து, சாத்தானுடைய கட்டுகளிலிருந்து மக்களை விடுவிக்க ஒற்றுமையுடனும், தைரியத்துடனும் வீர நடைபோட வேண்டும்.

**10. சபை ஒரு விளக்கு (மத் 5:14-16 ; பிலிப் 2:14-16)**

ஆகவே நாம் இவ்வுலகிற்கு முன் மாதிரியான வாழ்க்கை வாழ்ந்து, உலகின் ஒளியான இயேசுவுக்கு தொடர்ந்து சாட்சி பகர்ந்து இருளை அகற்ற வேண்டும்.



# சமயத்திற்கு ஏற்றபடி செய்


## Rev. A. எட்வின் பிரபாகர்

இயக்குனர், தமிழ் பிரதேச வடகிழக்கு மிஷன் இலாக்கா


பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் தமிழ் பிரதேச மிஷனரி ஊழியத்தின் சார்பாக அன்பின் வாழ்த்துக்கள். தமிழ் பிரதேச மிஷன் பணி அவசிய பணியாகும். இந்த தலையாய பணியை ஜெபத்தாலும், உற்சாக தியாக காணிக்கைகளினாலும், பங்களிப்பினாலும் தாங்கி வருகிற அனைத்துப் போதகர்கள், சபைகள், சபை மக்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் நன்றி கூறுகிறோம்.

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக மறுபடியும் ஒரு மிஷன் தரிசன செய்தியை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். 1 சாமு.10:7-இல் சாமுவேல் சவுலைப் பார்த்து “சமயத்திற்கு ஏற்றபடி நீ செய். தேவன் உன்னோடே இருக்கிறார்” என்று சொல்லுகிறதைப் பார்க்கிறோம். 1சாமு.10:1. சாமுவேல் தைலக்குப்பியை எடுத்து சவுலின் தலையின் மேல் வார்த்து, முத்தம் செய்து, கர்த்தர் தம்முடைய சுதந்திரத்தின் மேல் உன்னை தலைவனாக அபிஷேகம் பண்ணினார் என்று சொல்லி, “சமயத்திற்கு ஏற்றபடி நீ செய்” என்று ஆலோசனையைக் கொடுக்கிறதைப் பார்க்கிறோம்.

பல ஆண்டுகள் உருண்டோடி இன்று கிறிஸ்துவின் வருகையைச் சபை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் காலத்தில் சபை மக்கள் இது எப்படிப்பட்ட காலம். சமயம் என்பதை அறிந்து கவனமாய் செயல்படும் மக்களாய் இருக்கிறோமா? சிந்திக்க கேட்கிறேன். நாம் காலத்திற்கும் சமயத்திற்கும் ஏற்றபடி வாழ்ந்து செயல்படும் மக்களாய் இருக்க தேவன் விரும்புகிறார். இச்சமயத்திற்கு ஏற்றபடி தரிசனம் கொண்டு, ஊக்கத்தோடே அன்பின் இயேசுவின் சுவிசேஷத்தை அறிவிக்கவும், பாரத தேசங்களில் பரப்பிட தேவன் நமக்கு கிருபை செய்வாராக!

**கொடிய காலம், கொடிய சமயம் இது!** (2 தீமோ. 3:1).

இன்று தேசத்தில் நடக்கும் சகல காரியங்களும் இது ஒரு கொடிய காலம், சமயம், என்பதை தெரிவிக்கிறது. கலவரங்கள், விபத்துக்கள், நாசமோசங்கள், பாவ பெருக்கங்கள், கொடிய காலம் வருமென்று அறிவாயாக என்ற பவுல் அப்போஸ்தலனின் வார்த்தையே நமக்கு அறிவுறுத்துகிறது (2தீமோ. 3:1-5). மனுஷர்களும் பணப்பிரியராயும் வீம்புகாரராயும், தற்பிரியராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்கு கீழ்படியாதவர்களாயும், நன்றி அறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும் இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர் களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளையும். துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்பு உள்ளவர்களாயும், தேவ பிரியராயிராமல், சுபபோக பிரியராயும், தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாய் மாறிப்போன

சமயம் இது. இன்று சபை மக்கள் இச்சமயத்தில், கொடிய காலத்தில் வேறுபட்டு பரிசுத்தமாய் ஜீவிக்கவும், முன்மாதிரியாய் ஜீவிக்கவும், இப்படிப்பட்ட காலத்தில் அழியும் தேச ஜனங்களாய் செய்ய வேண்டியதைச் செய்யவும் கர்த்தர் நமக்கு கிருபைத் தருவாராக! (எபே.5:16).

**சமயத்திற்கு ஏற்ற அறிவடைவோமாக!** (1 நாளா.12;32).

இஸ்ரவேல் கோத்திரங்களில் இசக்கார் புத்திரரின் அறிவு விசேஷமானதே. இஸ்ரவேல் புத்திரர் செய்ய வேண்டியது இன்னதென்று அறிந்ததும் காலாகாலங்களுக்குத் தகுந்த யோசனை சொல்லத்தக்கதாகவும் ஜீவியம் இருந்ததும் எத்தனை விசேஷமானது. நாமும் இச்சமயம் கடைசி காலம் என்பதை உணர்ந்து நாம் செய்ய வேண்டியதை அறியவும், செய்து முடிக்கவும் எனக்கு உதவி செய்யும் என்று தேவனை நோக்கி முறையிடுவோமாக? இனி வாழும் வாழ்வு, இது கடைசி சமயம் என்ற அறிவோடு வாழ, செய்ய வேண்டியது செய்ய, இசக்கார் கோத்திரத்தைப் போல பிறரையும் அறிவுறுத்த, தட்டி எழுப்ப தேவன் கிருபை செய்வாராக!

**சமயத்திற்கேற்றபடி பிரயோஜனப்பட அழைப்பு** (எஸ்தர் 4:14).

எஸ்தர் இராஜாத்தி தன் கால அழிவில் தப்பும்படி தன்னை பிரயோஜனப் படுத்தினதைப் பார்க்கிறோம். விலகியோடும் நபராய் இருக்க எஸ்தர் விரும்பவில்லை என ராஜமேன்மை இச்சமயத்திற்கு உதவியாயிருக்கும் என்று ராஜமேன்மையைப் பயன்படுத்தி, உபவாசித்து, ஜெபித்து, ஜெபிக்க பிறரையும் சுண்டி எழுப்பி, ஜீவனையே அர்ப்பணித்து தன் ஜனத்தை மீட்டெடுத்தாள். இந்தியாவின் இரட்சிப்பு, எழுப்புதல் எஸ்தராய் நாம் அர்ப்பணிப்பதில் தான் இருக்கிறது. நாம் பிரயோஜனமாக இருக்க அர்ப்பணிப்போமாக? பிரயோஜனமில்லாதவனாக வாழ்ந்த நாட்கள் இருந்தது. பவுலின் சந்திப்பிற்கு பிறகு பிரயோஜனமுள்ளவனாக மாறினானே (பிலே.10:1). தேசத்தில் நான் இந்தியாவின் இரட்சிப்பிற்காக பயன்பட பிரயோஜனமாக்கும் என்று அர்ப்பணித்து எழும்புவோமாக.

**சமயத்தற்கேற்றபடி நமது பங்களிப்பை நிறைவேற்றுங்கள்!**

(1 சாமு.10:7) சமயத்திற்கேற்றபடி செய் என்ற வார்த்தையின்படி அழியும் ஜனங்களுக்காக பாரம் பெறுவோமாக!. வட மாநிலங்களுக்கு சென்று சுவிசேஷத்தை அறிவிப்போமாக! திறப்பில் நின்று சில மணி நேரங்கள் அனுதினமும் ஜெபித்து உதவிட செய்வோமாக! மிஷனெரிகள் ரூபாய் 5,000/- மாதந்தோறும் கொடுத்து உதவி செய்வோமாக! வட மாநிலங்களில் ரூபாய் 5,00,000/- செலவில் சிற்றாலயம் கட்டி கொடுக்க முன்வருவோமாக! வருடத்திற்கு ஒரு முறை ஜெப நடை மிஷனெரி பிரயாணமாக வடமாநிலத்திற்கு வாருங்கள் என்றும் உங்கள் பங்களிப்பை நிறைவேற்றுங்கள் என்றும் அழைக்கிறோம்.

அழைக்கப்பட்ட பவுல், மிஷன் பணிக்காக குறைந்த ஆண்டுகளில் எருசலேம் துவங்கி இல்லிரீக்கம் வரை (ரோமர் 15:17). சுவிசேஷத்தை அறிவித்து தன் பங்களிப்பை நிறைவேற்றினதுபோல், மிஷன் பணிக்காக நிறைவேற்றுவீர்களாக. இந்தியாவில் இன்றும் எத்தனை மாநிலங்கள், மாவட்டங்கள், தாலுகாக்கள், பட்டணங்கள், கிராமங்கள் அறிவிக்கப்பட வேண்டியதாய் இருக்கிறது. ரோமர் 15:21-ன் படி கிறிஸ்துவின் நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் இந்தியாவில் சுவிசேஷத்தை அறிவிக்க, செய்ய வேண்டியதை செய்ய முன்வருவீர்களாக!. 1சாமு.10:7ன் படி தேவனும் உங்களோடே கூட இருப்பார். ஆசீர்வாதமாய் இருப்பீர்கள்! ஆமென். அல்லேலூயா

# ஜெபிக்கும் திருச்சபை

**அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப். 2:42)**

**திருச்சபை உதயமானதே ஒரு ஜெப அறையில்தான்** - அப்.1:14.

**திருச்சபை வளர்ந்ததும் ஜெபத்தினால்** - அப்.9:31.

**திருச்சபை உயர்ந்தது ஜெபத்தினால்** - அப். 4:4.

**திருச்சபை ஜெபத்தினால் முன்னேறியது** - அப்.6:7; 16:5.

**திருச்சபை ஜெபத்தினாலேயே உலகைக் கலக்கியது** - அப்.17:6.

**திருச்சபையின் ஜெபத்தினால் இடம் அசைந்தது** - அப்.4:31.

**திருச்சபையின் ஜெபத்தினால் புதிய வாசல் திறக்கப்பட்டது** - அப்.12:10; 5:19.

**திருச்சபை ஜெபத்தின் வல்லமை, சிறைச்சாலையை அசைத்தது** - அப்.16:26.

**திருச்சபை ஜெபத்தினால் பரலோக வாசல் திறந்தது** - அப்.7:55,56.

**திருச்சபையின் ஜெபம், தேவ தூதனை இறங்கி வரச்செய்தது** - அப்.12:5,7;10:2.

**திருச்சபை, ஜெபித்து தீர்மானம் எடுத்தது** - அப். 1:25;26.

**திருச்சபை, ஜெபத்திற்கு முதலிடம் கொடுத்தது** - அப்.6:4.

**திருச்சபை, ஜெபத்தின் வல்லமையை நன்கு அறிந்திருந்தது** - அப். 4:9-31.

**திருச்சபை, ஜெபத்தினால் விளையும் ஆசீர்வாதங்களை அனுபவித்தது** - அப். 2:46; 4:31-35.

**திருச்சபை, ஜெப ஐக்கியத்தைக் காத்துக்கொண்டது** - அப்.2:44-46; 4:32.

**திருச்சபை, ஜெபத்தினால் தரிசனம் பெற்றிருந்தது** - அப்.10:2,3; 16:9.

**திருச்சபை, ஜெபத்தினால் ஊழியத்தை நிறைவேற்றியது** - அப்.6:6-8.

**திருச்சபை, ஜெபத்தினால் வாக்குத்தத்தம் நிறைவேறக்கடவது** - அப்.2:1-4.

**திருச்சபை, ஜெப நேரத்தில் ஒரு ஒழுங்கைக் கடைபிடித்தது** - அப்.3:1.

**திருச்சபை, ஜெபத்தில் தேவ மகிமையை வெளிப்படுத்தியது** - அப்.7:55.

**திருச்சபை, ஜெபத்தினால் தடைகளைத் தகர்த்தது** - அப். 4:18,31; 5:40,41,

**திருச்சபை ஜெபத்தினால் பிசாசின் கிரியைகளை நிர்மூலமாக்கியது** - அப்.13:8-11.

**திருச்சபை, ஜெபத்தினால் அநேக அற்புதங்களை கண்டது** - அப்.6:8; 8:6,7;2:43.

**திருச்சபை, ஜெபத்தினால் தேவ நாமத்தை மகிமைப்படுத்தியது** - அப்.4:21; 19:17.

**திருச்சபை, ஜெபத்தினால் சரியான திசையில் பயணித்தது** - அப்.16:6-8.

**திருச்சபை, ஜெபத்தினால் தடுமாறாமல் முன்னேறிச் சென்றது** - அப். 16:9-16.

**திருச்சபை, ஜெபத்தினால் நற்சாட்சியை காத்துக்கொண்டது** - அப். 2:32; 4:13

**திருச்சபை, ஜெபத்தினால் கிருபையில் வளர்ந்து பெருகினது** - அப். 4:23.

- முழுங்கால் யுத்தம்



# பணிவிடைத் தலைவனின் நற்குணம்

## A Character of a Servant Leader

Rev. D. சாலமோன்

தலைவர், கிறிஸ்துவின் ஸ்தானிகர்கள் வாலிபர் ஊழியம்

(நல்ல குணம் இருப்பவர்கள் எல்லாம் தலைவனாக வேண்டிய அவசியம் இல்லை, ஆனால் ஒரு தலைவனாய் இருப்பவர்களுக்கு நல்ல குணம் இருக்கவேண்டியது அவசியம்).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், கிறிஸ்துவின் ஸ்தானிகர் CA ஊழியங்களின் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள். இன்றைய காலக்கட்டத்தில் தேவ இராஜ்யத்தின் மிக பெரிய தேவையையும், சவாலையும் குறித்தும் அதற்கான தீர்வையும் ஆவியானவரின் உதவியோடு கற்றுக்கொள்ள தேவன் உதவி செய்வாராக.

**மத்தேயு 9:36-38** வசனங்களில் தேவன் தம் ஜனங்களை தம்மைப்போல கரிசனையோடு விசாரித்து நடத்தும் தலைவர்கள் வெகு சிலரே இருப்பதாகவும், அந்த தேவை சந்திக்கப்பட ஜெபிக்கவும் சொல்கிறார்.

ஆதி.1:28 வசனத்தில் முதல் மனிதனை "ஆண்டு கொள்ளுங்கள்" என்று ஆளுமையை கர்த்தர் கொடுத்தார். மனிதன் தனது சுயநலத்திற்காக சுயசித்தத்தை பயன்படுத்தியதால், தேவன் கொடுத்திருந்த தலைமைத்துவ பண்புகளை அவன் இழந்து போய்விட்டான். அதன் விளைவு மிக மோசமானதாகவும், வருந்தத்தக்கதாகவும் இருந்து வருகிறது. நியா.21:25 வசனத்தில் தலைவன் இல்லையென்றால் எதிர்கால சந்ததி வீழ்ச்சியடையும் என்பதை பார்க்கிறோம்.

தேவனாகிய கர்த்தர் எந்த பாரபட்சம் இல்லாமல் அவரைப் போல சிறந்த தலைவர்களாக உருவாக்கி பயன்படுத்துகிறார்.

Leonard Ravenhill இவ்வாறாக கூறுகிறார் "தலைவனாக யாரும் பிறப்பதில்லை; மாறாக தலைவனாக உருவாக்கப்படுகிறார்கள்".

### தலைமைத்துவம் (Leadership)

- இயேசு கிறிஸ்துவை பிரதிபலிக்க வேண்டிய முக்கியமான பொறுப்பாகும்.
- தலைமைத்துவம் என்பது ஜனங்களை தேவதிட்டத்திற்கு நேராக நடத்துவதாகும் "Leadership is Laddership"-B.Samuel.
- மக்கள் மத்தியில் உள்ள தனது செல்வாக்கை Influence பயன்படுத்தி ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளை கொண்டு வருவது.

### சிறந்த தலைமைத்துவம் : The Best Leadership Style

உலகத்தில் பல தலைமைத்துவ வகைகளும், போதனைகள் இருந்தாலும், (எ.கா.Authoritative Leadership, Democratic Leadership, Transformational Leadership, Servant Leadership) இதில் இயேசு கிறிஸ்து நடைமுறைபடுத்தி காட்டியது Servant Leadership. இந்த பணிவிடை தலைமைத்துவம் தான் மிக சிறந்ததாகும்.

## பணிவிடை தலைமைத்துவ குணம் உருவாக 4 முக்கிய காரணிகள்
## Four essentials for Servant Leadership Character Formation

### 1. சுய ஒழுக்கம் : (Self-discipline) நீதிமொழிகள் 16:32

ஒழுங்குப்படுத்துவதற்கு நம்மை ஒப்புக்கொடுப்பதே சுய ஒழுக்கமாகும். நம்முடைய பெலனை ஆரோக்கியமாகவும் ஞானமாகவும் ஆக்கப்பூர்வமான பாதையில் கொண்டு போவதற்கு உதவுவதே சுய ஒழுக்கம் ஆகும். சுய ஒழுக்கம் ஆவியின் கனிகளின் கனியாக இருக்கிறது.

தேவனாகிய கர்த்தர் மோசே மூலம் தம் ஜனங்களுக்கு கொடுத்த 10 கட்டளைகளை கற்பலகையில் எழுதப்படும் முன்பே ''விபச்சாரம் செய்யாதிருப்பாயாக" என்று யோசேப்பின் இருதயத்தில் எழுதப்பட்டிருந்தது. பழைய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்தாலும் புதிய ஏற்பாட்டின்படி வாழ்ந்தார் யோசேப்பு. ஜீவரட்சனை செய்யும்படி தேவனால் உயர்த்தப்பட்டார். இருதயத்தின் தீர்மானத்தின்படி வாழ வேண்டும் என்கிற நற்பண்பை வளர்த்துக்கொள்ள சுய ஒழுக்கம் உதவுகிறது.

### 2. வாழ்வின் மதிப்பீடுகள்: (Core Value) சங்கீதம் 15

அனுதினம் நாம் பயன்படுத்தும் Internet GB, Petrol, LPG, Gold, குடிதண்ணீர் போன்றவை விலை அதிகமாகி கொண்டிருந்தாலும் அதை பயன்படுத்துகின்றோம். காரணம், அதில் மதிப்பு இருக்கிறது. அவைகள் இல்லாமல் நாம் இல்லை என்ற நிலை வந்துவிட்டது.

சங்கீதம் 100:1-8 வசனங்களில் தாவீது தன் வாழ்க்கையில் பின்பற்றிய வாழ்வியல் பண்புகளை விளக்கிக் காண்பிக்கிறார். மத்தேயு 5-ம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்தவின் மலை பிரசங்கப் போதனைகளை பின்பற்றும் சிறப்பு தன்மைகளே ஒருவரது வாழ்க்கையின் மதிப்பீடுகளாக கருதப்படுகிறது.

மனிதனையும் மிருகங்களையும் வித்தியாசப்படுத்தி காட்டப்படுகிறது. “தேவனுடைய சாயல்'' அதனை உணர்ந்து தேவபக்திக்கேதுவாக முயற்சி செய்யும்போது வாழ்வின் மதிப்பீடுகள் அதிகமாகிறது.

### 3.அடையாளம் : (Identity) 1 பேதுரு 2:9

ஆதார் என்பது இந்திய தேசத்தின் குடிமகனுக்கு ஓர் பொதுவான அடையாளம். அனுதினமும் பயன்படுத்தும் Mobile அதன் மெய் பயன்பாட்டாளரின் பயன்பட Finger Print கேட்குது. வேலை ஸ்தலத்தில் Bio Metric, ID Cards, ஆகியவை மூலம் ஒருவரின் மெய் அடையாளம் அறியப்படுகிறது. அடையாளம் என்பது மிக முக்கியம் வாய்ந்தது.

“நான் யார் who am I?" நான் யாருடையவன் whose am I? ஆகிய இந்த கேள்விகள் ஒருவரின் மெய் அடையாளத்தை தெளிவுப்படுத்துகிறது. “நான் என்ன செய்கிறேன் என்பதை விட நான் யாராக இருக்கிறேன் என்பது மிக முக்கியமானது". Who am I is more important than what I do? Identity is important than initiatives.

யோசேப்பு, தானியேல், எஸ்தர், பவுல் அப்போஸ்தலன் மற்றும் பலர் தங்கள் வாலிப வயதில் மொழி, கலாச்சாரம், உடை, வசிப்பிடம், பெயர் மாறினாலும் தாங்கள் ஆண்டவரின் பிள்ளை என்ற அடையாளத்தை மறக்கவில்லை, மாற்றிக் கொள்ளவும் இல்லை. அந்த அடையாளம் அவர்கள் குணத்தை வெளிப்படுத்தியது.

### 4. நேர்மை : Intergity (சங்கீதம் 32:2)

நாம் கடிதங்களில் கையெழுத்திடும்போது "Yours sincerely" என்று எழுதுவதுண்டு. இந்த “Sincerely" என்ற சொல் “Sincera” என்ற வார்த்தையில் இருந்து பிறந்ததாகும். "Sincera" என்றால் “உண்மை, நேர்மை, கலப்படம் இல்லாத” என்று அர்த்தமாம்.

இன்றைய காலகட்டத்தில் அனைவருக்கும் இருக்கும் அழுத்தம் “இலக்குகள், லாபம்” ஆகியவற்றை அடையவே தூண்டப்படுகிறோம். (Taste-oriented/Goal oriented). ஆனால் தேவனோ நமது குணங்களைக் குறித்து அதிக கரிசனையுள்ளவராய் இருக்கிறார்.

**நற்குணங்கள் உருவாக 5 விதிகளை நடைமுறைப்படுத்துங்கள்!**

1. தனிப்பட்ட வாழ்க்கையில் என்ன செய்கிறீர்களோ அதையே பொதுவான வாழ்க்கையிலும் முரண்பாடு இல்லாமல் வாழுங்கள்.
2. தனிப்பட்ட வாழ்க்கையில் எதை பேசுகிறீர்களோ அதையே பொது வாழ்க்கையிலும் ஏற்புடையதாக நிதானித்து பேசுங்கள்.
3. ஒருவரை நேரில் பார்த்துக் கூறமுடியாததை சமூக வலைதளங்களில் கூறாதீர்கள்.
4. கடந்த 5 ஆண்டுகளில் நீங்கள் செய்தவைகள் மற்றும் செய்ய தவறியவைகளை தற்பரிசோதனை கேள்வியாய் உங்களையே நீங்கள் கேட்டுக் கொள்ளுங்கள்.
5. நமது பேச்சு தாழ்மையாகவும், நடக்கை முற்போக்கானதாயும் இருக்க வேண்டும். பிரபலமாக வேண்டும் என்பது அல்ல; உண்மையாய் இருக்க வேண்டும்.

## HOW TO KNOW GOD'S WILL?

There are five specific ways in which God guides us. It is listed below in their order of importance.

1. **Commanding Scripture:** It means that believers are to be informed by the worldview and values contained in God's Word. God will never guide us to do things that contradict His Word.

2. **Compelling Spirit:** This implies that we have sufficient spiritual maturity to be able to discern the difference between the guidance or prompting of God's Holy Spirit and our personal feelings. Just because we feel something doesn't mean that God is behind it or in it.

3. **Common Sense:** a reminder of the important difference between authentic faith and naive credulity. God gives us common sense for a reason. It's important that we make good use of it.

4. **Counsel of the Saints:** Like it says in Proverbs 15.22, "Plans fail for lack of counsel, but with many advisers they succeed." It's never a bad idea to seek the wisdom of mature believers when we're considering a course of action.

5. **Circumstantial Signs:** A lot of folks seem to think that the main way God speaks to us is through circumstantial signs. In fact, it's number five, at the bottom of the list, for a reason. Our circumstances can sometimes flat out contradict God's will for our lives. Remember how in the psalms David wonders why the wicked prosper, while Job wonders why he's suffering despite his having lived an upright life? We live in a fallen world and life isn't always fair. So while circumstantial signs sometimes may be a way God guides us, they are not necessarily the chief or most important way. Rather than focusing on signs, really get to know your Bible, be open to the guidance of God's Holy Spirit, use your common sense, and seek the counsel of the saints.



# புதிய ஆரம்பம்

## A NEW BEGINNING

**Rev.E. டேவிட் மெர்வின் பிரபாகர்**

செயலாளர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்

புதிய கல்வி ஆண்டினை ஆரம்பித்திருக்கும் அன்பு மாணவர்களுக்கு கிறிஸ்துவுக்கு மாணவர்கள் ஊழியத்தின் சார்பாக வாழ்த்துக்கள்.

"நல்ல தொடக்கம் சரித்திரம் பயக்கும்" என்பது நாம் அறிந்ததே. எந்த ஒரு காரியத்திலும் சரியான ஆரம்பம் இருப்பது மிக முக்கியமானது. ஆரம்பம் சரியாக இருந்தால் பயணமும் சீராக இருக்கும். மனதும் சாந்தமாக இருக்கும்.

இவை அனைத்தும் நாம் அறிந்ததே, எனினும். அநேக நேரங்களில் நாம் கோட்டைவிட்டு விடுகிறோம். சில நேரங்களில் முயற்சித்தும் தோற்றுப்போகிறோம். அதுவே நாளடைவில் நம் பழக்கமாக மாறி, ஆரம்பத்தை நினைத்தாலே பதறும் சூழ்நிலை உருவாகிறது. இந்த புதிய கல்வி ஆண்டிலும் பதற்றத்தோடு இருப்பீர்களானால் உங்களுக்கு ஓர் நற்செய்தி. ஏசாயா 43:19-ல் கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது, "இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும்" ஆம், இக்கல்வி ஆண்டில் கர்த்தர் ஒரு புதிய காரியத்தை செய்யப் போகிறார். இதுவரை இருந்ததுபோல் இல்லை, புத்தம் புதிய ஒரு ஆரம்பத்தை கர்த்தர் கொடுக்க விரும்புகிறார். ஆதலால்,

### 1. கர்த்தரிடத்தில் நம்பிக்கையாய் இரு-Have Faith in God

நாம் ஆராதிக்கிற தேவன் சர்வ வல்லவர். உன்னையும் என்னையும், சர்வ அண்டத்தையும் உண்டாக்கியவர். ஏசாயா 43:15-ல் கர்த்தர் தன்னை இஸ்ரவேலின் சிருஷ்டிகராகவும், நம் ராஜாவாகவும் அடையாளம் காட்டுகிறார். நம் சிருஷ்டிகரே நம்மிடத்தில் ''புதிய காரியத்தை செய்கிறேன்'' என்று வாக்குப்பண்ணும்போது, இதை விட வேறென்ன நம்பிக்கை நமக்கு வேண்டும். இதுவரை நம் முயற்சிகள் தோல்வி அடைந்திருக்கலாம். நாம் எண்ணினது நிறைவேறாமல் போயிருக்கலாம். நம் சுய பெலனும், திறமையும் கைவிரித்திருக்கலாம். ஆனால் கர்த்தருடைய வார்த்தையில் விசுவாசத்தோடு, அவரிடத்தில் நம்பிக்கை வைப்பீர்களானால் நிச்சயம் ஜெயம் தருவார். உன் நம்பிக்கை வீண்போகாது.

- கர்த்தரே ஞானத்தையும், அறிவையும் கொடுக்கிறவர் (நீதி. 2:6; தானி. 2:21).
- கர்த்தரே ஜெயத்தை கொடுக்கிறவர் (நீதி. 21:31).
- கர்த்தருடைய பிள்ளைகளாகிய நீங்கள் ஜெயிப்பீர்கள் (1 யோவான் 5:4).

### 2. கடந்துபோனதை சிந்திக்காமல் இரு-Don't Dwell on the Past

கல்வியில் மட்டும் அல்ல, வாழ்விலும் வெற்றி பெற வேண்டுமானால் கடந்ததை நினைத்துக்கொண்டிராமல், முன்னேற்ற பாதையில் கவனம் செலுத்த வேண்டும். கடந்த காலம் என்பது, தோல்வியின் அனுபவங்கள் மட்டும் அல்ல, வெற்றிகளும் அதில் அடங்கும். தோல்வியை சந்தித்தவர்கள் மீளாத துக்கத்தில் துவண்டு

போவதுபோல், வெற்றியின் ருசியை கண்டவர்கள். பல நேரத்தில் அதின் மயக்கத்திலேயே இருந்து விடுகின்றனர். ஏசாயா 43:18-ல், கர்த்தர் குறிப்பிட்டார் "முந்தினவைகளை நினைக்க வேண்டாம்; பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டாம்". ஆம், பழைய வெற்றியையே பேசிக்கொண்டு, அதின் நிழலிலே படுத்திருந்தால் நம் வேகம் குறைந்துவிடும். நம் கூர்மையும் மழுங்கிவிடும். கர்த்தர் ஒரு புதிய வெற்றியை தரப்போகிறார். அதற்காக உத்வேகத்தோடு ஓட ஆரம்பி, படிப்பத்தில் முழு கவனம் செலுத்து, ஆர்வத்தோடு முயற்சி செய். கர்த்தர் வெற்றியை தருவார். நினைவில் கொள்ள வேண்டியது.

- கடந்து வந்த தோல்விகள் உன் அடையாளம் அல்ல.
- கடந்த கால வெற்றிகளும் உன் அடையாளம் அல்ல.
- பூர்வமானது அல்ல, அபூர்வமானதை கர்த்தர் உனக்காக செய்வார்.

## 3. கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனமாய் இரு- Be the Chosen People of God

யோசேப்பு, தானியேல், எஸ்தர், மரியாள் எப்படி தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாய் இருந்தார்களோ, அப்படியே நீயும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மாணவர், ஏதோ ஒரு முகாந்தரத்தோடும், நோக்கத்தோடும் தேவன் உன்னை தெரிந்தெடுத்திருக்கிறார். உன் வாழ்வு அந்த முகாந்தரத்தை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். ஏசாயா 43:20,21-ல், கர்த்தர் நம் ஜனத்தை தாமே தெரிந்துகொண்டதாகவும், தனக்கென்று ஏற்படுத்தினதாகவும் குறிப்பிடுகிறார். இந்த புதிய ஆரம்பத்தில் மற்றவர்களுக்கு முன்பாக நீ கர்த்தருடைய பிள்ளை என்பதை பிரதிபலிக்க இருக்க தீர்மானம் எடு. படிக்கும் காலங்களில் வீட்டுப்பாடம் (Home Work) தேர்வு (Exams and Tests) Assignments என அடுக்கடுக்காக பளுக்கள் இருந்தாலும் கர்த்தருக்கடுத்த காரியங்களில் மனஞ்சலித்துப் போகாமல் (ஏசாயா 43:22) கவனமாய் இருக்க வேண்டும்.

- ஒவ்வொரு நாளும் ஜெபிப்பதிலும், வேதம் தியானிப்பதிலும் சமரசம் செய்யாதே (No Compromise)

- எவ்வளவு வேலைகள் இருந்தாலும் கர்த்தருக்குத்தான் முதல் இடம் கொடுக்க வேண்டும் என்பதை மறந்துவிடாதே.

- ப ள்ளியில்/கல்லூரியில் மற்ற மாணவர்களுக்கு முன்பாக உன் பரிசுத்தத்தை காத்துக்கொள், கெட்ட வார்த்தைகள், பொய் சொல்லுதல், ஆசிரியரை கமெண்ட் அடித்தல், மற்றவர் செய்யும் தவறுக்கு துணைபோவது, காப்பி அடித்தல் போன்ற கர்த்தருடைய நாமத்திற்கு கலங்கம் விளைவிக்கிற எந்தவொரு காரியத்தையும் செய்யாமலிருக்க கவனமாயிரு.

புதிய கல்வி ஆண்டு உன் படிப்பிற்கு மாத்திரம் அல்ல, உன் வாழ்க்கையையும் மேம்படுத்த கர்த்தர் கொடுத்திருக்கும் ஒரு நல்ல வாய்ப்பு, பழையவைகளை களைந்து எறிந்து, புதியவைகளை பற்றிக்கொள்! ஜெயம் கொடுக்கிற தேவன் உன்னோடு கூட இருப்பார்.

"கர்த்தரை சார்ந்து காரியங்களை செய்;
கர்த்தரின் காரியமாய் செய்;
கர்த்தரே உன் காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்"

சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ



## பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20
Contributing Editor, Paripoorana Jeevan

ஹாய் குட்டீஸ்.. எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? பரிபூரண ஜீவன் சிறுவர் பகுதிக்கு நீங்கள் கொடுத்துவரும் மேலான ஆதரவை உங்கள் கருத்துக்கள் மூலம் அறிந்து தேவனை துதிக்கிறேன். விடுமுறை முடித்து புதிய கல்வி ஆண்டுக்குள் நுழைந்திருப்பீர்கள் அப்படித்தானே? புதிய கல்வியாண்டில் புதிய தீர்மானங்கள், புதிய நண்பர்கள், புதிய ஆசிரியர்கள், புதிய பாடங்கள் என அனைத்துமே புதுசு தான். ரொம்ப சந்தோஷம், கூடவே இயேசப்பா கொடுக்கிற புதிய கிருபையையும் தினமும் பெற்று சாதனையாளர்களாக மாற மனம் நிறைந்து வாழ்த்துகிறேன். இன்றைக்கும் ஒரு சுவாரசியமான கதையை உங்களுக்காக வைத்திருக்கிறேன். கதை கேட்க ரெடியா? வாங்க போகலாம்..

ஒரு எல்லை போரின்போது இரண்டு நண்பர்கள் களத்தில் இருந்தனர். எதிரிகள் சுற்றி வளைத்து சுடும்போது ஒருவன் மட்டும் குண்டடி பட்டு கீழே விழுந்து விட்டான்.

சிறிது தூரம் சென்றதும் அவனுடைய நண்பன் தன் கமென்டரிடம், சார்.. நான், என் நண்பனை எப்படியாவது தூக்கிவந்து விடுகிறேன், எனக்கு உத்தரவு கொடுங்கள் என்றான். அதற்கு அவர், இந்த சூழலில் மறைந்திருந்து தாக்குவது தான் சரியான வழி, நீ அங்கு போவதால் உன் உயிருக்கு தான் ஆபத்து. நீ போவதென்றால் போ, ஆனால் நீ போவதால் எதுவும் நடந்து விடப்போவதில்லை என்று கூறினார் கமென்டர்.

உத்தரவை பெற்றுக்கொண்ட அவன், தன் உயிரையும் பொருட்படுத்தாது தன் நண்பனை காப்பாற்ற ஓடினான். அவனை தோளில் தூக்கிகொண்டு வரும்போது எதிரிகள் இவனையும் சுட்டனர். மின்னல் வேகத்தில் இவனது கைகளை குண்டு துளைத்தது. அதையும் மீறி, தன் நண்பனை தூக்கிக் கொண்டு இராணுவ மருத்துவ முகாம் வந்து சேர்ந்தான். மருத்துவர் அவனை பரிசோதித்து பார்த்தபோது அவன் நண்பன் சற்று முன் இறந்து போயிருந்தான். உடனே கமென்டர் அவனிடம், நான் அப்போதே சொன்னேன், நீ அவனை காப்பாற்ற போவதால் எந்த உபயோகமும் இல்லை என்று, இப்போது பார்... அவனை காப்பாற்ற போய் நீயும் அடிபட்டு கிடக்கிறாய் என்றார்.

அதற்கு அந்த இராணுவ வீரன், நான் போனதுதான் சரி தான் சார் என்றான். என்ன சொல்கிறாய்? உன் நண்பன் ஒரு பக்கம் இறந்து கிடக்கிறான். நீ மற்றொரு பக்கம் அடிபட்டு இங்கே கிடக்கிறாய், நீ சொல்வது எப்படி சரியாகும் என்று கேட்டார் அந்த கமென்டர்.

அதற்கு அந்த வீரன் சொன்னான், சார்.. நான் அங்கு போகும்போது என் நண்பன் உயிருடன் தான் இருந்தான். அவன் என்னிடம் என்னை காப்பாற்ற நீ வருவாய் என்று எனக்கு தெரியும் நண்பா என்று சொல்லிவிட்டு என் மடியில் தான் இறந்தான். நான் மட்டும் போகாமல் இருந்திருந்தால், நம் நண்பன் நம்மை காப்பாற்ற வராமலே போய் விட்டானே... என்ற எண்ணத்திலேயே அவன் உயிர் போயிருக்கும், அவன் என்னிடம் சொன்ன அந்த ஒரு வார்த்தை எனக்கு போதும் கமென்டர், இந்த காயம் எல்லாம் எனக்கு ஒரு பொருட்டே இல்லை என்றான்.

அன்பு தம்பி தங்காய், உண்மையான நட்பின் ஆழத்தையும் அர்த்தத்தையும் இந்த சம்பவம் நமக்கு எடுத்துரைக்கிறது அல்லவா? ஆம், 'ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை' (யோவான் 15:13) என வேதாகமம் கூறுகிறது. நண்பர்கள் கிடைப்பது எளிது, ஆனால் நல்ல நண்பர்கள் கிடைப்பது அவ்வளவு எளிதானதல்ல. நல்ல நண்பர்களை அடையாளம் காண சில ஐடியா கொடுக்கட்டுமா?

- நல்ல நண்பர்கள் ஒருவருக்கொருவர் அவர்களது நல் வளர்ச்சியில் பொறாமையின்றி, மனதார சந்தோஷப்படுவார்கள்.
- நல்ல நண்பர்கள் ஒருவருக்கொருவர் எந்த சூழ்நிலையிலும் சந்தேகமின்றி நம்புவார்கள் மற்றும் ஒளிவு மறைவின்றி நடந்து கொள்வார்கள்.
- நல்ல நண்பர்கள் ஒருவருக்கொருவர் தவறு செய்வதற்கு தூண்டவோ, துணைபோகவோ அல்லது ஒத்துழைக்கவோ மாட்டார்கள்.
- நல்ல நண்பர்கள் ஒருவருக்கொருவர் வாழ்வு/தாழ்வு என எல்லா சூழ்நிலையிலும் சுயநலமின்றி, எவ்வித எதிர்பார்ப்புகளுமின்றி உடனிருப்பார்கள்.
- நல்ல நண்பர்கள் ஒருவருக்கொருவர் ரகசியங்களை, பெலவீனங்களை ஒருபோதும் எக்காலத்திலும் லீக்அவுட் செய்ய மாட்டார்கள்.
- நல்ல நண்பர்கள் ஒருவருக்கொருவர் செய்யும் தவறுகளை நேருக்குநேர் சுட்டிக்காட்டி எச்சரிப்பார்கள். நமது இயலாமையை, தோல்வியை, பெலவீனத்தை தங்களுக்கு இருப்பது போல உணர்ந்து செயல்படுவார்கள்.
- நல்ல நண்பர்கள் ஒருவருக்கொருவர் ஆரோக்கிய மற்றும் ஆவிக்குரிய செயல்களில் உற்சாகப்படுத்தி, சரியான ஆலோசனை வழங்குவதுடன் முன்மாதிரியாக இருப்பார்கள்.

மாணவச்செல்வங்களே, மேற்கண்ட குணாதிசயங்கள் உங்கள் நண்பர்களிடம் உள்ளதா? இத்தகைய குணநலன்கள் கொண்ட நண்பர்களை நம்முடைய சபைகளில் சிறுவர் மாணவர் வகுப்புகளில் தான் கண்டுபிடிக்க முடியும். ஆகவே இந்த புதிய கல்வி ஆண்டில் உங்களோடு பயிலும் அனைவரோடும் பாரபட்சமின்றி அன்பாயிருங்கள். ஆனால் மேற்கொண்ட குணாதிசயம் கொண்டவர்களோடு மட்டும் நண்பர்களாக இருங்கள்.

உன் நண்பனைச் சொல், உன்னைச் சொல்கிறேன் என்று கூறுமளவிற்கு நண்பர்களின் தாக்கம் நமக்குள் ஏற்படுகிறது. அப்படியானால் நமது நண்பர்கள் குணநலன்களில் தரமுள்ளவர்களாக இருக்க வேண்டியது அவசியமல்லவா? இயேசு கிறிஸ்து இரவு முழுவதும் ஜெபம் செய்து, பின்னர் தம்முடன் இருப்பதற்கான சீஷர்களை தெரிந்து கொண்டார். நீங்களும் ஜெபத்துடன் உங்கள் நண்பர்களை தெரிவு செய்து ஆரோக்கியமான நல்லுறவை வளர்த்துக்கொள்ளுங்கள்.

### மனன வசனங்கள்

சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான் (நீதி.17:17).

சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள்; சத்துரு இடும் முத்தங்களோ வஞ்சனையுள்ளவைகள் (நீதி. 27:6).

இந்த பகுதி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை 97503 81784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக... அடுத்த இதழில் மற்றொரு சிறுகதையுடன் உங்களை மறுபடியும் சந்திக்கிறேன்... டாட்டா...



# SMART START


## Rev. பெகின் சாமுவேல்

இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்


ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள். பிள்ளைகள் அனைவரும் புதிய கல்வியாண்டிற்குள் சென்றிருக்கிறார்கள். அவர்களுக்கு என் வாழ்த்துதல்களை AGCM சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன். இந்த கல்வி ஆண்டு பிள்ளைகளுக்கு ஆசீர்வாதமாக இருக்க நான் ஜெபிக்கிறேன். இந்நாட்களில் புதிய வகுப்புகளுக்கு செல்லும் பிள்ளைகளைக் குறித்து சில ஆலோசனைகளை பெற்றோர்களுக்கு சொல்ல விரும்புகிறேன்.

### 1. கர்த்தரில்லா பிரயாசம் விருதா (Labour is vain without the Lord)

நம்முடைய முயற்சியினால் நமது பிள்ளைகளை எவ்வளவு பெரிய, பிரபலமான பள்ளிகளில் பல லட்சம் செலவழித்து படிக்க வைத்தாலும் தேவனுடைய அநுக்கிரகமும், தயவும் இல்லாவிட்டால் அதில் ஒன்றுமில்லை. அதைத்தான் சங்கீதக்காரனாகிய தாவீது 127-ம் சங்கீதத்தில் 1 மற்றும் 2ம் வசனத்தில் இவ்வாறாக குறிப்பிடுகிறார். கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா. கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா. எனவே நல்ல பள்ளியில் படிக்க வைத்தாலும், அதிகப் பணம் செலவழித்தாலும் கர்த்தர் நம்முடைய பிள்ளைகளை கட்ட ஒப்புக்கொடுப்போம். விருதாவாய்ப் போகாது. அது ஆசீர்வாதமாய் இருக்கும்.

### 2. பிள்ளைகள் தான் ஆசீர்வாதம் (Children are the blessings)

பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். (ஆசீர்வாதம்). கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன் (சங்.127:4) என்று வாசிக்கிறோம். பிள்ளைகளின் படிப்பு, மதிப்பெண்கள், வேலைகள், வருமானம், பதவி உயர்வுகள் எல்லாம் தேவைதான். ஆனால் அது மட்டும் நமக்கு ஆசீர்வாதம் அல்ல. பிள்ளைகள் தான் நமது ஆசீர்வாதம். பிள்ளைகளின் மதிப்பெண், உயர் படிப்பைக் காட்டிலும் பிள்ளைகள் தான் தேவன் நமக்கு தந்த ஆசீர்வாதம். பிள்ளைகளை ஒருபோதும் அவர்களின் படிப்பைக் காரணம் காட்டி சபிக்காதீர்கள். அலட்சியப்படுத்தாதீர்கள். அவர்களை ஆசீர்வதியுங்கள். உங்கள் பிள்ளைகள் நீட் தேர்வு பாஸ் பண்ணவில்லை, நீங்கள் எதிர்பார்த்த மதிப்பெண் எடுக்கவில்லை என்று அதை காரணம் காட்டி அவர்கள் எதற்கும் பிரயோஜனம் அற்றவர்கள் என்று ஒதுக்காதீர்கள். அவர்களை வேதனைப்படுத்தாதீர்கள். முதலாவது அந்தப் பிள்ளைகள் தான் உங்கள் ஆசீர்வாதம்.

### 3. கூர்மையான அம்புகள் (Sharp arrows)

வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்... (சங்.127:5). பிள்ளைகள் அம்பு (arrow) போன்றவர்கள் . எப்பொழுதும் அந்த அம்பு மிகவும் கூர்மையாய் இலக்கை நோக்கி பாய்ந்து செல்லக் கூடியவர்களாய் இருக்க வேண்டும். அந்த பொறுப்பு அந்த அம்பை

எய்கிறவர்களாகிய பெற்றோரின் கையில்தான் உள்ளது. நாம் பிள்ளைகளை மழுங்கப்பண்ணுகிறவர்களாகவோ, இலக்கு தவறி பாய்கிறவர்களாகவோ மாற்றி விடக்கூடாது. அவர்களை உற்சாகப்படுத்தி தேவனுக்கு முன்பாக நிறுத்தி, அவர்களை ஜெபத்திலும், வேதவாசிப்பிலும், ஆலயத்திற்குரிய காரியங்களிலும் ஈடுபட வைத்து அவர்களை எப்பொழுதும் கூர்மையாக வைத்திருந்து அவர்கள் இலக்கை அடைய உறுதுணையாய் இருங்கள்.

இந்த கல்வியாண்டு முழுவதும் தேவன் நம் பிள்ளைகளோடு இருப்பாராக.

## 2022-ல் பரிபூரண ஜீவன் போட்டிகளில்
## சரியான விடை எழுதி தவறாமல் பங்கு பெற்றவர்களின் பெயர்கள்

**செங்கோட்டை:**S.முத்துலெட்சுமி; S.பிரேமலதா; N.K.கோகிலா; ராணி பிளஸ்ஸிங்; J.சுமதி; பூங்கோதை; சித்ரா பிளஸ்ஸி; L.குளோரி; விஜி ராஜா; K.மகேஷ்வரி; M.கனகவல்லி; ராதாமணி; M.எஸ்தர்; மயில்ராஜ்; மாது; E.கலா; ரோஸ்லின்; ஜெயா சுவாமிநாதன்; |**திருநின்றவூர்** : ரோஸ்; புவனேஸ்வரி; கேத்ரினா; ஏடா டாரியா;| **ஸ்ரீவில்லிபுத்தூர்**: நித்யா; தேவ பிரியா; கிறிஸ்டி பிரியா; மெசி; குளோரி; புஷ்பா; ஜெயராணி; நெல்சன் செல்வராஜ்; |**மதுராந்தகம்**: ஹரிணி;| **கடையநல்லூர்**:தங்கராஜ்; |**புளியங்குடி**: ஜெபஞானம்; ஜெயமணி; |**நாசரேத்**: எஸ்தர்; தாசன் மோசஸ்.

## குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள்



**திருநின்றவூர்** :கேத்ரினா; **ஸ்ரீவில்லிபுத்தூர்:** புஷ்பா
**புளியங்குடி:** ஜெபஞானம்; **கடையநல்லூர்:** தங்கராஜ்
**நாசரேத்**: தாசன் மோசஸ்

## பரிபூரண ஜீவன் போட்டி எண் -99 (சரியான விடைகள்)

**யாக்கோபு**

1. நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும் அதைச் செய்யாமற்போனால் அது அவனுக்குப் (4:17)
2. செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் (5:16).
3. தன் வழிகளிலெல்லாம் (1:8).
4. நெருப்புதான், அநீதி நிறைந்த (3:6).
5. கிரியைகளில்லாதிருந்தால் தன்னில்தானே (2:17)

**I,II பேதுரு**

1. முடிவு சமீபமாயிற்று. ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம் பண்ணுவதற்கு (1 பேதுரு 4:7).
2. தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் (1 பேதுரு 5:6)
3. இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் (1 பேதுரு 1:22)
4. மனுஷர் பேச்சைப் பேசித் தீர்க்கத்தரிசியினுடைய (2 பேதுரு 2:16).
5. கனம்பண்ணுங்கள், அன்பு கூருங்கள், பயந்திருங்கள், கனம்பண்ணுங்கள் (1 பேதுரு 2:17)
6. தீர்க்கதரிசன வசனமும் (2 பேதுரு 1:19)
7. நீதிமான்கள்மேல் (1 பேதுரு 3:12)
8. நீடிய பொறுமையை (2 பேதுரு 3:15)

## I,II, III யோவான், யூதா

1. பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற (1 யோவான் 5:4).
2. சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ (1 யோவான் 3:15).
3. தேவனால் (3 யோவான் 1:11).
4. ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் (1 யோவான் 1:5).
5. செய்கைகளின் பலனை இழந்துபோகாமல் பூரண பலனைப் பெறும்படிக்கு (2 யோவான் 1:8).
6. நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே (1 யோவான் 2:6).
7. தேவனை அறியான். தேவன் அன்பாகவே (1 யோவான் 4:8).
8. தமது ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி இரட்சித்து, பின்பு விசுவாசியாதவர்களை (யூதா 1:5).

## போட்டி எண் : 99 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை**:ஜெசிலின் ஆபிரகாம்; பிரபா; தங்கமணி; சித்ரா பிளஸ்சி; பூங்கோதை; T.ஜெபபாக்கியவதி; சுமதி ஜோசப்; தாவீது S.மாரிமுத்து; ராதாமணி; E.கலா; மதி; எஸ்தர் (அ.பு); மகேஷ்வரி;T.சாந்தி;விஜிராஜா;புஷ்பவல்லி;டோரா;மரகதம்;எப்சிபா (விசுவை); |**கடையநல்லூர்**:G.ஸ்டெல்லா டார்லீஸ்;R.தங்கமணி; தங்கராஜ்; செல்வி இந்திராணி; வினோலியா; ஆஷா தேவி;|**இடைகால்**:மகேஷ்வரி;செல்வி ஜான்சன்; சித்ரா; |**திருநின்றவூர்**: லீலா பரணி; சகுந்தலா பாண்டியன்; ரூத்; மாலதி; J.வின்சி; எழிலரசி ; |**நெல்வாய்**: V.அமலா; அருணா; ஆர்த்தி; நர்மதா; கற்பகம்; அணிஷ்கர்; தருண்குமார்; சந்தியா; தேன்மொழி;| **இறச்சகுளம்**: எஸ்தர் புனிதலதா; M.கலா; V.ராதிகா; கனகமணி; ரேனுகா ரூபன்; மகிழ் ஜெயந்தி; ஜெஸ்மின் ; |**மதுரை**: N.பியூலா; மேரி நற்குணம்; V.ராஜீ; சுபத்ரா; A.டேரின் ;| **ஆண்டிபட்டி**: பிளஸ்சி எலிசபெத்; ஹெலன் மார்கிரேட்; புளோரியா; மேரி ; |**ஆறுமுகநேரி**: ரூபி புவனா; L.ஐசக்; இமான்ஷி பிரியா; பிரேமா கணேசன்; பானுமதி ; |**எடப்பாடி**: M.சுதா; புஷ்பா; T.அஞ்சலி; பாக்கியம் பழனி; ஜோசப் மேரி; மாலதி சுரேஷ்;|**மடத்துக்குளம்**:ரூத்; பரிமளா; ஸ்டெல்லா மேரி; S.சேர்மக்கனி; K.கிரேஸ்மேரி; சரண்யா; |**ஸ்ரீவில்லிபுத்தூர்**: C.ஆபிரகாம்; பாஞ்சாலி Tr.; மாதவி; |**நாசரேத்**:G.மதன்; D.தாசன் மோசஸ்; G.எஸ்தர்;| **திருச்சி**: R.சாந்தி; ஜஸ்டஸ் டேனியல்; |**பெருங்குளம்**: J.ஜெயலின் சிங்; A.பியூலா; S.பவித்ரா; B.ஏஞ்சல்; |**புளியங்குடி**: Y.ஞானமணி; M.சுந்தரி; P.எஸ்தர் ராணி; |**ஆத்தூர்**: பரமேஸ்வரி; E.பிளாரன்ஸ்; G.லில்லி; |**கூடங்குளம்**: S.சுரேஷ்; செல்வி; |**திருச்செந்தூர்**: தேவதாஸ் ; |**பழையகாயல்**:R.சாந்தா; கிருபா பிளஸ்ஸி ; |**T.N.C.ஆலங்குளம்**: மரியாள் ; |**ஆலங்குளம் (வி)**:R.V.பிளாரன்ஸ்; ஸ்டெல்லா மேரி;|**கோவில்பட்டி**:V.வால்டர் சிங்; |**பாவூர்சத்திரம்**:S.ஜெசிலி;|**சென்னை**:ஜோதி; எலைன்; |**குரோம்பேட்**: D.ரெபெக்காள்; கோமதிகுமார்; தாமரை செல்வி; |**கோட்டிவாக்கம்**: அஞ்சலி; |**சேத்துப்பட்டு**:ரெக்ஸி ஈஸ்வரன் ;|**காமராஜபுரம்**:மரகதலீலா;|**வலசரவாக்கம்**: நிர்மலா எஸ்தர்; |**திருவள்ளூர்**:S.ஆனந்தகுமார்; |**ஆம்பூர்**: கிரிஜா சந்தியா; |**வீரபாண்டியன் பட்டணம்**:அலீஸ்;டைனிஷியா ; |**அகஸ்தியர்பட்டி**:நிர்மலா ; |**திருநெல்வேலி**:இவாஞ்சலின் சாரேன் ரோஸ்; |**K.T.C.நகர்**: சர்மிளாராஜன்; |**தூத்துக்குடி**: சகாயமேரி; |**அயப்பாக்கம்**:அம்மணி; |**கடம்பாடி**: வின்சென்ட் ராஜ்; |**தேனி**: திரவியச்செல்வி; கிருபா; S.தனம்; K.மீனா;|**கிச்சிப்பாளையம்**:சாரோன் ஜெயரூபி; |**உக்கிரன் கோட்டை**: ருக்குமணி ஜெயராஜ் ; |**கள்ளக்குறிச்சி**: வசந்தி இராஜகுமார் ; |**அரியலூர்**: G.வசந்தி ; |**பவானி**: A.ரேச்சல் மனாசே; |**குன்னூர்**: E.ஜெனிபர்; |**ஆவடி**:C.ஜீவ பிறீடா; |**புதூர்**:S.கீர்த்தனா; |**கோவை**: கிறிஸ்டினா அபிகாயில்; குளோரிபால் ; |**சுரண்டை**:குளோரி ஞானம் ; |**நாட்டார்மங்களம்**: எஸ்தர் ; |**உடுமலைப்பேட்டை**:E.கேபிரியேல்; |**பழனி**:T.பிரீத்தி; | **இராமன்புதூர்**:M.லீதியாள்;|**சாத்தூர்**:சரோஜா;|**ஏர்வாடி**:K.மரகதம்;|**செங்கல்பட்டு**:K.லதா;

## போட்டி எண் : 99 (சரியான விடை எழுதியவர்கள்...)

|**கடாட்சபுரம்**:ரேவதி ஹில்பர்ட்; |**தர்மபுரி**:ரூத்; |**சிவகங்கை**: அபிஷாக்; |**கட்டபெட்டு**: புஷ்பமாலா;|**திண்டுக்கல்**:S.லதா ஜான்சன்; |**கம்பம்**: ஜோதிமணி;| **புதுக்கோட்டை**:A.லலிதா ; |**வடக்கு கோணம்**:மரியநேசம்;|**நத்தக்காடையூர்**:Y.எஸ்தர்; ஏசையன்; |**தேவகோட்டை**: மேரிராபின்; |**மூக்குப்பேறி**:T.செல்லத்தாய் ராணி;|**T.N.பாளையம்**: சுஜா ; |**வில்லுக்குறி**:S.கிருஷ்ணகுமாரி ஜேசுராஜன்;|**தஞ்சாவூர் (வல்லம்)**: ஏஞ்சல் ரூபாவதி; விஜி ஜெயராஜ்;|**வத்ராப்**: ஜெபராணி; சிவகாமி;|**சூளைமேடு**:அருள்மேரி ; |**பசுவந்தனை**: ஹெப்ரி ஷேரன்; கிருபா சாலிக்கா; |**ஓசூர்**:R.ஜெமிந்தா; ஜெம் ரிச்சர்டு; |**தேனிமலை**: சுகுணா; |**அச்சிறுப்பாக்கம்**: ரேஷ்மா; விஷ்னுப்பிரியா; செல்வகுமாரி; நான்சி.

---

## பரிபூரண ஜீவன் போட்டி எண்-100
## வெளிப்படுத்தின விசேஷம்
## இருப்பிடத்துடன் விடை எழுதவும் (பொருத்துக)

1.பத்மு - தேள்களின் வல்லமை.

2. அப்பொல்லியோன் - பிசாசு என்னும் சாத்தான்.

3. எபேசு சபை - இன்னும் பரிசுத்தமாகட்டும்.

4. வானவில் - தீர்க்கதரிசனம் உரைத்தல்.

5. ஏழு கண்கள் - வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும்.

6.பத்து கொம்புகள் - எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்வான்.

7. சர்தை சபை - தீவு.

8. உலகமனைத்தையும் மோசம் போக்கும் - ஆதி அன்பை விட்டகுறை.

9. தவளை - வெதுவெதுப்பான நிலை.

10. சிமிர்னா சபை - மரகதம்.

11. ஆயிரத்திரு நூற்றறுபது நாள் - பத்து ராஜாக்கள்.

12. வெட்டுக்கிளி - தேவனுடைய ஏழு ஆவிகள்.

13. பிலதெல்பியா சபை - தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல்.

14. பழைய பாம்பு - அற்புதங்கள் செய்கிற பிசாசுகளின் ஆவி.

15. பெர்கமு சபை - வலுசர்ப்பம்.

16. பரிசுத்தமுள்ளவன் - மிருகம்.

17. லவோதிக்கேயா சபை - மரணபரியந்தம் உண்மையாயிரு.

18. சிறுத்தை - பாதாளத்தின் தூதன்.

19.தியத்தீரா சபை - திறந்த வாசல்.

20. ஜெயங்கொள்கிறவன் - உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா.

---

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.8.2023



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

# ஏ.ஜி திருச்சபைகளின் அடிப்படை வேதாகம உபதேசங்கள்

1. பரிசுத்த வேதாகமம் ஆவியானவரால் ஏவபட்டு எழுதப்பட்டது (2 தீமோ.3:16,17).
2. ஒரே மெய்யான தேவன் திரித்துவமாக வெளிப்பட்டுள்ளார் (உபாகமம் 6:11; மத்தேயு 28:19).
3. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தெய்வீகமானவர் (மத்தேயு 1:23).
4. மனிதன் தானாக மீறுதலுக்குட்பட்டு வீழ்ச்சியடைந்தான் (ஆதியாகமம் 1:26,27;2:17;3:6).
5. தேவ குமாரனாகிய இயேசுவின் இரத்தத்தின் மூலம் மட்டுமே மனிதன் இரட்சிக்கப்பட முடியும் (எபே.2:8; ரோமர் 10:13-15)
6. சபையின் அனுசாரங்களான முழுக்கு ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தி ஆகியவை திருவசன கட்டளை (மாற்கு 16:16; ரோமர் 6:4; 1 கொரி.11:26).
7. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் சாட்சியுள்ள ஜீவியத்திற்கும் வல்லமையான ஊழியத்திற்கும் அவசியம் (அப்.1:8).
8. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் வெளிப்படையான ஆரம்ப அடையாளம் அந்நிய பாஷை (அப்.2:4).
9. பரிசுத்தமாகுதல் (ரோமர் 12:12; 1 தெச.5:23).
10. பாவத்தில் இழந்து போனவர்களை தேடி இரட்சிப்பது சபையின் அருட்பணியாகும் (மத்தேயு 28:19,20).
11. ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தருக்காக ஊழியம் செய்யும் ஊழியனாக செயல்பட வேண்டும். மேலும் சபையில் தலைமைத்துவ பொறுப்புகளில் ஐந்துவித வரமுள்ள ஊழியங்களைக் கர்த்தர் நியமித்துள்ளார் (எபேசியர் 4:12,13).
12. தெய்வீக சுகம்-மீட்பின் பரிகாரத்தில் வியாதியினின்று விடுதலை பெறுவதற்கான பரிகாரமும் உட்பட்டுள்ளது (ஏசாயா 53:4,5; மத்தேயு 8:17).
13. கிறிஸ்துவின் வருகையில் அவரை சந்திப்பது சபையின் ஆசீர்வாதமான நம்பிக்கையாகும் (1 தெச.4:16,17).
14. இயேசு தமது பரிசுத்தவான்களோடு திரும்ப வந்து இப்பூமியிலே 1000 வருடம் ஆட்சி செய்வார் (வெளி.20:1-6).
15. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு இறுதி நியாயத்தீர்ப்பு உண்டு (வெளி.20:11-15).
16. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களுக்காக புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகும் (வெளி.21:22).



Registered News Paper Regd. No. 8206 / 62

"வளர்ச்சியை நோக்கி" கருத்தரங்கு – மதுரை











VBS ஊழியங்கள்–2023





# எழுப்புதலின் 10 ஆண்டுகள்

## DECADE OF REVIVAL
## 2021-2030

ஜெபிப்போம்! செயல்படுவோம்! சுதந்தரிப்போம்!

BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664